அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்

தமிழ்ச் சுவடிகள்
விவர அட்டவணை

தொகுதி-26
(ஆர். எண். 7787-8066)

பதிப்பாசிரியர்

டாக்டர். பூ. சுப்பிரமணியம், எம்.ஏ., பி.டி., பி.எச்.டி.
தமிழ்ப்புலவர், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை-5.

பொதுப்பதிப்பாசிரியர்

நடன. காசிநாதன், எம்.ஏ.,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-113.

வெளியீடு

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை - 600 005

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்

தமிழ்ச் சுவடிகள்
விவர அட்டவணை

தொகுதி-26
(ஆர். எண். 7787-8066)

பதிப்பாசிரியர்

டாக்டர். பூ. சுப்பிரமணியம், எம்.ஏ., பி.டி., பி.எச்.டி.
தமிழ்ப்புலவர், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை-5.

பொதுப்பதிப்பாசிரியர்

நடன. காசிநாதன், எம்.ஏ.,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-113.

வெளியீடு

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை - 600 005

A DESCRIPTIVE CATALOGUE

OF THE

TAMIL MANUSCRIPTS

IN THE

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS

Editor

Dr. P. SUBRAMANIAM, M.A., B.T., Ph.D.

(Tamil Pandit, Government Oriental Manuscripts Library, Madras-5)

General Editor

NATANA. KASINATHAN, M.A.,

Director, Department of Archaeology, Madras-113.

Volume XXVI

(R.Nos. 7787 to 8066)

Published by

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY

MADRAS-600 005

1994

First Edition - 1994 (500 copies)

© Government Oriental Manuscripts Library,
Madras-600 005

A Descriptive Catalogue of the Tamil Manuscripts. Vol. XXVI

Editor :

Dr. P. SUBRAMANIAM, M.A., B.T., Ph.D.
(Tamil Pandit, Government Oriental Manuscripts Library, Madras-5)

General Editor :

NATANA. KASINATHAN, M.A.,
Director, Department of Archaeology

Price :

Printed at
Department of Archaeology
Tharamani, Madras-600 113.

பொதுப் பதிப்பாசிரியர் முன்னுரை

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் 71, 180 சுவடிகளும், சுமார் 30,000 அச்சு நூற்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன, இச்சுவடிகள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், வடமொழி, உருது, அரபு, பாரசீகம் முதலிய மொழிகளில் எழுதப் பட்டுள்ளன. இலக்கியம், இலக்கணம், தத்துவம், வரலாறு, மருத்துவம், கணிதம் முதலிய பல்வேறு பொருட்களைத் தெரிவிப் பனவாக அமைந்துள்ளன.

அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகத்தால் இதுவரை, இந்நூலகத் தமிழ்ச் சுவடிகளுக்கு மட்டும் விவர அட்டவணைகளாக 25 தொகுதிகள் வெளிவந்துள்ளன. தற்போது வெளிவரும் இவ் வெளியீடு 26-ஆம் தொகுதியாகும். இதில் 280 தமிழ்ச் சுவடிகள் விவரிக்கப்பட்டுள்ளன. இவ்விவரங்கள் தமிழில், இந்நூலகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற தமிழ்ப்புலவர் டாக்டர் பூ. சுப்பிரமணியம் அவர்களாலும், ஆங்கிலத்தில், இந்நூலகக் காப்பாட்சியர் டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன் அவர்களாலும் தயாரிக்கப்பட்டு உள்ளன.

இந்நூலை வெளிக்கொணர்வதற்கு ஆக்கமும், நிதி ஒதுக்கீடும் அளித்த தமிழ்நாடு அரசுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை செயலாளர் திருமிகு. சா. பா. இளங்கோவன் அவர்கட்கும் என் பணிவான நன்றி.

இந்நூலைப் பதிப்பித்துள்ள டாக்டர் பூ. சுப்பிரமணியம் அவர் களையும், ஆங்கிலக் குறிப்பு எழுதியுள்ள டாக்டர். எஸ். சௌந்தர பாண்டியன் அவர்களையும் மனமுவந்து பாராட்டுகிறேன். இத்துறை யின் அச்சுப்பிரிவின் அச்சுக்கோர்ப்பாளர்களாகிய திரு. மா. ஆ. சங்கர், செல்வி செம்மலர், மெஷின் மைண்டர். திரு. சி. சத்தியவேலு, மற்றும்

அச்சுப்பிரிவுப் பணியாளர்கள் அனைவருக்கும், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ப்புலவர் திரு. S. தியாகராஜன், M.A.,B.L., அவர்களுக்கும் எம் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் இலக்கியம். மருத்துவம், கணிநூல் (சோதிடம்) ஆகியவை பற்றி ஆய்வு செய்வோருக்கு மேலும் ஒரு துணை நூலாக இது உதவும் என்று திடமாகக் கருதலாம்.

நடன. காசிநாதன்
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

General Editor's Introduction

The Government Oriental Manuscripts Library has published so for 25 volumes of Tamil Descriptive Catalogues. These are extremely useful for those who do research on Tamil literature Medicine and Astrology. The present volume is the 26th of the Descriptive Catalogues of Tamil manuscripts giving descriptions for 280 Tamil manuscripts.

The Tamil Nadu Government have pleased to sanction sufficient amount every year for the publication of the unpublished manuscripts. I thank the Government of Tamilnadu and the Secretary to the Tamil Development and Culture Department Thiru. S. P. Elangovan I.A.S. for the interest evinced in bringing out this volume within the stipulated time.

In this volume, the descriptions in Tamil have been written by the former Tamil Pandit of this library Thiru. P. Subramaniam and the English version of the same is written by Dr. S. Soundarapandian, Curator.

I congratulate Dr. P. Subramaniam and Dr. Soundarapandian, the Curator for their sincere efforts to bring out this book. I also thank Messrs. M. A. Sankar, Selvi G. Chemmalar Compositors C. Sathyavelu Machine minder of this department for having neatly printed this volume. I also thank

Mr. S. Theagarajan, M.A., B.L., Tamil Pandit, Government Oriental Manuscripts Library, for having corrected the proofs.

I earnestly hope that this volume would be an additional source material to those who are engaged in research on Tamil language and Culture.

NATANA. KASINATHAN
Director
Department of Archaeology

பொருளடக்கம்

இராமாயணத் திரிவேணி (வசனம்) - தொகுதி ஒன்று	R.	7787
இராமாயணத் திரிவேணி (வசனம்) - தொகுதி இரண்டு	R.	88
இராமாயணத் திரிவேணி (வசனம்) - தொகுதி மூன்று	R.	89
வால்மீகியும் கம்பரும் - உரையாடல்	R.	7790
சுந்தர புராணம் - தொகுதி ஒன்று	R.	91
சுந்தர புராணம் - தொகுதி இரண்டு	R.	92
சுந்தர புராணம் - தொகுதி மூன்று	R.	93
பிரபந்தத் திரட்டு - தொகுதி ஒன்று	R.	94
பிரபந்தத் திரட்டு - தொகுதி இரண்டு	R.	95
சூர சங்காரப்பரணி	R.	96
சதாசிவப் பிரம்மேந்திர விஜயம்	R.	97
இலங்கைப் பரணி	R.	98
சங்கர விஜயம் - பாகம் ஒன்று	R.	99
சங்கர விஜயம் - பாகம் இரண்டு	R.	7800
சங்கர குரவன் ஆற்றுப்படை	R.	01
புவனேசுவரி அந்தாதி - (உரையுடன்)	R.	02
திருவேங்கடமுடையான் துதி மஞ்சரி	R.	03
திருவேரகத் திருவாயிரம்	R.	04
குன்று தோறாடல் திருவாயிரம்	R.	05
திருவாலவாய்த் திருவாயிரம்	R.	06
அங்கயற்கண்ணி அருள் வெள்ள மாலை	R.	07
பழமுதிர்சோலைத் திருவாயிரம்	R.	08
திருப்பரங்குன்றத் திருவாயிரம்	R.	09
திருச்செந்தூர்த் திருவாயிரம்	R.	7810
திருவாவினன் குடித்திருவாயிரம்	R.	11
பரங்கிரிக் கந்தவேள் மாலை	R.	12
புவனேசுவரி கவசம்	R.	13
கூடலழகர் திருமாலை	R.	14

சிந்தலை வாடித் திருநரசிங்க மாலை	R.	*15*
சிந்தலை வாடித் திருநரசிங்கன் தசகாரிகை மாலை	R.	*16*
ஆனந்த தாண்டவ மாலை	R.	*17*
சங்கர குருவர சந்திரகலா மாலை	R.	*18*
திருத்தணிகைப் பிரபந்தங்கள் பன்னிரண்டு	R.	*19*
கடிகாசலப் பிரபந்தாவளி	R.	*19(a)*
சோதிட நூல்	R.	*7820*
சோதிட பாவ பலன்	R.	*21*
அகத்தியர் வைத்திய வாகட வசனம்	R.	*22*
நாடி நூல்	R.	*23*
இரசவாத நூல்	R.	*24*
இலங்கைப் பரணி	R.	*25*
சூர சங்காரப் பரணி	R.	*26*
வயிரவர் பாடல்	R.	*27*
அகத்தியர் திராவகச்சூத்திரம்-எண்ணூறு	R.	*28*
வைத்தியம்	R.	*29*
வைத்திய சாஸ்திரம்	R.	*30*
வைத்தியம்	R.	*31*
வைத்தியமும் மந்திரமும்	R.	*32*
வைத்தியம்	R.	*33*
மந்திரம் வைத்தியம்	R.	*34*
அகத்தியர் சரக்கு வைப்பு	R.	*35*
அனுபவ வைத்தியம்	R.	*36*
அனுபவ வைத்தியம்	R.	*37*
அனுபவ வைத்தியம்	R.	*38*
அனுபவ வைத்தியம்	R.	*39*
சோதிட நூல்	R.	*7840*
வைத்திய நூல்	R.	*41*
வைத்திய வசனம்	R.	*42*
அனுபவ வைத்தியம்	R.	*43*
அனுபவ வைத்தியம்	R.	*44*
அனுபவ வைத்தியம்	R.	*45*

நஞ்சுண்ட மாலை	R.	46
கைலாசநாதர் வாத நூல் - நாற்பத்தொன்று	R.	47
தரும நெறி நீதிகள்	R.	48
வைத்தியமும் மந்திரமும்	R.	49
பால கிரிகை வைத்தியம்	R.	7850
அகத்தியர் சிவயோகம் - நூறு	R.	51
போகர் சூத்திரம் - ஐம்பது	R.	52
மரகதவல்லி மாலை	R.	53
போக நாயனார் இரண்டாம் காண்டம்	R.	54
அகத்தியர் திராவக சூத்திரம் - எண்ணூறு	R.	55
வைத்தியம்	R.	56
அகத்தியர் நயன வீதி	R.	57
சட்டை முனி சூத்திரம்	R.	58
வான்மீகர் சூத்திரம் - முப்பது	R.	59
இராம தேவர் சூத்திரம் - பத்து	R.	7860
நந்தீஸ்வரர் பிரணவ சூத்திரம்	R.	61
சோடச மாலை	R.	62
கந்தர் அநுபூதி - உரையுடன்	R.	63
திருமால் துதி	R.	64
மந்திரம்	R.	65
வயிரவர் பாடல்	R.	66
அஷ்டாங்கக் கோர்வை	R.	67
கருங்கோழி வித்தை	R.	68
அகத்தியர் காம ரூபி லேகியம்	R.	69
சுந்தரானந்தர் - ஐந்நூறு	R.	7870
ஞானவெட்டியான் - ஆனந்தக் களிப்பு	R.	71
தமிழ் இலக்கணம்	R.	72
தொன்னூல் விளக்கம்	R.	73
சிதம்பரப் பாட்டியல் - பொருத்த வியல் - உரையுடன்	R.	74
அகத்தியர் பூரண சூத்திரம் - இருநூற்றுப் பதினாறு	R.	75
அகத்தியர் சூத்திரம் - பத்து	R.	76
அகத்தியர் சூத்திரம் - ஐம்பது	R.	77

அகத்தியர் சூத்திரம் - பதினான்கு	R.	78
அகத்தியர் திராவகம்-சூத்திரம்-பதினான்கு	R.	79
அகத்தியர் சூத்திரம்-பதினான்கு (மந்திரம்)	R.	7880
அகத்தியர் வாகட சூத்திரம் - இருநூற்றைந்து	R.	81
நாடிச்சுருக்கம் வகை-வசனம்	R	82
விஷ வைத்தியம்-மந்திரம்	R.	83
நாடி சாஸ்திரம்-நொண்டிச்சித்து	R.	84
அசுவினி தேவர் பாடல்	R·	85
சிற்பரை சூத்திரம்	R.	86
அகத்தியர் பாடல்-நாற்பது	R.	87
மச்சமுனி சூத்திரம் - எண்பது	R.	88
இராமதேவர் சூத்திரம் - பத்து	R.	89
கொங்கணர் ஐநூற்றிரட்டு	R.	7890
கொங்கணர் பூஜாவிதி-பதின்மூன்று	R.	91
சுந்தரானந்தர் கற்பம் - ஐம்பத்தொன்று	R.	92
சட்டைமுனி மெய்ச்சுருக்கம் - ஐம்பத்தொன்று	R.	93
சுப்பிரமணியர் ஞானம்	R.	94
கருவூரார் பூஜா விதி	R.	95
அகத்தியர் பூஜாவிதி சூத்திரம் - பதினான்கு	R.	96
அகத்தியர் பூரண சூத்திரம்-இருநூற்றுப் பதினாறு	R	97
சுந்தரானந்தர் - நூற்றுப்பத்து	R.	98
இராமதேவர் சூத்திரம் - முப்பது	R.	99
கயிலாயச் சட்டைமுனி ஞான நூல்	R.	7900
சுந்தரானந்தர் தண்டகம்	R.	01
அகத்தியர் வைத்திய சூடாமணி	R.	02
காலாங்கி நாதர் திட்சை விதி - எண்பத்தொன்று	R.	03
காலாங்கி நாதர் பட்சிணி - ஐம்பத்தொன்று	R.	04
கைலாசச் சட்டைமுனி சூத்திரம் - பத்து	R.	05
தட்சிணாமூர்த்தி பதின்மூன்று சுத்தி - முப்பத்தொன்று	R.	06
விஷ வைத்தியம், மந்திரம்	R.	07
பஞ்ச பட்சி சாத்திரம்	R.	08
வைத்தியப் பாடல்கள்	R.	09

கொங்கணர் கற்ப வுற்பத்தி	R. 7910
வைத்தியம் (வசனமும் செய்யுளும்) சக்கரங்களுடன்	R. 11
வல்லாள ராஜன் யட்ச கானம்	R. 12
முருகன் அந்தாதி	R. 13
சிவ புராணம்	R. 14
கொங்கணர் சூத்திரம்	R. 15
புவனைத் தியானம்	R. 16
திரி புரை யந்தாதி	R. 17
வைத்தியமும் மந்திரமும்	R. 18
கோரக்கர் கன்ம சூத்திரம்	R. 19
போகர் கன்ம சூத்திரம்	R. 7920
அஷ்டாங்கக் கோர்வை	R. 21
கருங் கோழி வித்தை	R. 22
அகத்தியர் திராவகச் சூத்திரம்	R. 23
நாடிச் சுருக்கம் - வகை - வசனம்	R. 24
விஷ வைத்தியம், மந்திரம்	R. 25
தட்சிணாமூர்த்தி பதின்மூன்று சுத்தி முப்பத்தொன்று	R. 26
விஷ வைத்தியம் - மந்திரம்	R. 27
வைத்தியப் பாடல்கள்	R. 28
சீசக நாடகம்	R. 29
கஜேந்திர மோட்சம்	R. 7930
திருமூலர் சூத்திரத் திரட்டு	R. 31
அகத்தியர் காம ரூபி லேகியம்	R. 32
நாடிசாஸ்திரம் - நொண்டிச்சிந்து	R. 33
அனுபவ வைத்தியம்	R. 34
அனுபவ வைத்தியம்	R. 35
புலத்திய நாயனார் - முந்நூறு	R. 36
சுந்தரானந்தர் ஐநூறு	R. 37
அகத்தியர் வைத்திய சூடாமணி	R. 38
திருமூலர் கற்பமுறை ஐநூற்றிரட்டு	R. 39
இராமதேவர் வினோத வித்தை	R. 7940
பழனியாண்டவர் சிந்து பாமாலை	R. 41

இராமானுஜ திவ்ய சூரி சரிதை	R.	42
வைத்தியம் வசனமும் செய்யுளும்-சக்கரங்களுடன்	R.	43
அசுவினி தேவர் பாடல்	R.	44
அகத்தியர் சூத்திரம்-நாற்பத்தெட்டு	R.	45
மந்திரம்	R.	46
வைத்திய நூல்	R.	47
சோதிட நூல்	R.	48
அகத்தியர் குழம்பு	R.	49
கற்பூர சலா சித்து	R.	7950
அகத்தியர் கர்ம காண்டம்-முப்பத்தாறு	R.	51
பல பாடற் றொகுதி	R.	52
வைத்தியத் திரட்டு	R.	53
அகத்தியர் கர்ம நிவர்த்தி சூத்திரம்	R.	54
சர்வார்த்த ஸார பூஷணம்	R,	55
சிற்பரை சூத்திரம்	R.	56
வைத்திய வசனம்	R.	57
அனுமார் மந்திரம்	R.	58
அனுபவ வைத்தியம்	R.	59
நாம நட்சத்திரம்	R.	7960
வைத்தியம் மந்திரம் முதலியன	R.	61
அனுபவ வைத்தியம்	R.	62
சகுந்தலை விலாசம்	R.	63
அனுபவ வைத்தியம்	R.	64
அனுபவ வைத்தியம்	R.	65
அனுபவ வைத்தியம்	R.	66
அனுபவ வைத்தியம்	R.	67
சித்தர் வெண்பா	R.	68
ஞான வுலா	R.	69
சிவ ஞான அகவல்	R.	7970
வைத்தியம்	R.	71
கணபதி மந்திரம்	R.	72
கம்பராமாயணம்-யுத்த காண்டம் உரையுடன்	R.	73

கொங்கணர் கடைக்காண்டம்	R.	74
அனுபவ வைத்தியம்	R.	75
கணிதாமிருத வெண்பா	R.	76
சாதக சிந்தாமணி	R.	77
அகத்தியர் உபதேச ஞானம்-51	R.	78
பெண்பிள்ளை சாதக பலன்கள்	R.	79
இராசிபலன்	R.	7980
இருது சாஸ்திரம்	R.	81
இருபாவிருபது-உரை	R.	82
காயகற்பம் முதலியன	R.	83
சின்னப்ப நாயகன் வமிசாவளி	R.	84
வைகாபுரி நாட்டு வரலாறு	R.	85
திருவண்ணாமலைத் தீர்த்த வரலாறு	R.	86
அகராதி	R.	87
சல்லிப்பட்டி ராம நாயகன் வம்சாவளி	R.	88
கிஞ்சுவாடி பாளையக்காரர் வமிசாவளி	R.	89
புவன சக்கரம்	R.	7990
கொங்கு மண்டல வரலாறு	R.	91
ஆவுடையார்புரம் பாளையக்காரர் வரலாறு	R.	92
மருதுரை கிராமம் ஆலால சுந்தர பண்டிதர் வமிசாவளி	R.	93
மருதுறை கிராமத்துச் சைவமடாதிபதி ஆலால சுந்தர பண்டிதர்க்குரிய பூதான சிலாசாசனம்	R.	94
சிவகிரி சுப்பிரமணியசுவாமி தல வரலாறு	R.	95
ஆண்டிப்பட்டி பாளையக்காரர் பொம்மநாயகன் வமிசாவளி	R.	96
அரவக்குறிச்சி தாலுக்கா கிராமக் கணக்கரிடமிருந்த பண்டைய கணக்குகள் வரலாறு	R.	97
கலச க்ஷேத்திர மான்மிய வரலாறு	R.	98
புளகாதீசுவரன் சரித்திரம்	R.	99
ஜைன முனிவர்கள் சந்ததி வரலாறு	R.	8000
ஜைனர் விண்ணப்பம்	R.	01
திருவக்கரைக் கைபீது	R.	02

நான் மண்டலக் குறிப்பு	R.	03
குடிமல்லூர்க் கைபீது	R.	04
சிங்களத்வியக் கைபீது	R.	05
திராவிட தேசத்துறைனாலய வரிவட்டவணை	R.	06
பொம்மையநாயகன் பாளையப்பட்டின் பூறாவோத்திரம்	R.	07
அகத்தியர் சூத்திரம்	R.	08
கொங்கணர் சரக்கு வைப்பு நூறு	R.	09
அகத்தியர் பல திரட்டு	R.	8010
அகத்தியர் தர்க்க சாஸ்திரம்	R.	11
தன்வந்திரி வைத்திய சிந்தாமணி	R.	12
உபமான சங்கிரகம்	R.	13
ஆத்மதத்வ தரிசனம்	R.	14
திருமூலர்ஆறாதாரக்கட்டளை	R.	15
தத்துவ ஞானாமிருதம்	R.	16
நீதி சாரக் கரு	R.	17
நீதி சாரானுபவத் திரட்டு	R.	18
பலவகை மந்திரங்களும் சக்கரங்களும்	R.	19
கும்பமுனி பரிபூரணம்-1200	R.	8020
சுகர்நாடி-பாகம்-1	R.	21
தத்வ தீபப்ரகாசிகை	R.	22
அவிநாசித் தலபுராணம்	R.	23
அஷ்டகர்மப் பிரயோக முறை	R.	24
வைத்தியப்பாடல்கள்	R.	25
போகர் சூத்திரம்-21	R.	26
சுகர்நாடி-பாகம்-2	R.	27
மங்கை நாயகர் கழிநெடில்	R.	28
தேச நிர்ணயம்	R.	29
பெரிய புராணச்சுருக்கம்	R.	8030
ஜனவிநோதினி	R.	31
பலவகைப்பாடல்கள்	R.	32
கால சக்கரம் பாகம்-1	R.	33

கால சக்கரம் பாகம்-2	R.	34
பரங்கிரிக் கந்தவேள் மாலை	R.	35
ஸ்ரீபுவனேசுவரி கவசம்	R.	36
கூடலழகர் திருமாலை	R.	37
சிந்தலை வாடித்திருநரசிங்க மாலை	R.	38
சிந்தலை வாடித்திருநரசிங்கன் தசகாரிகை மாலை	R.	39
ஆனந்த தாண்டவ மாலை	R.	8040
சங்கரகுருவர சந்திர கலாமாலை	R	41
வால்மீகியும், கம்பரும்	R.	42
கடிகாசலப் பிரபந்தாவளி	R.	43
திருத்தணிகைப் பிரபந்தங்கள்	R.	44
கடைப்பிள்ளைப் பூசாவிதியும் தண்டகமும்	R.	45
சூதமுனி சூத்திரம்	R.	46
கோளேறு மாலை	R.	47
பஞ்சமத மகாவாக்கிய சம்பிரதாய வரலாறு	R.	48
விவேக சமுத்திரம்	R.	49
கடைப்பிள்ளை வேதாந்த சூத்திரம்	R.	8050
வண்ணச்சுவடி	R.	51
ஈசோபநிடதம்	R.	52
கேநோபநிடதம்	R.	53
கடோபநிடதம்	R.	54
பிரசினோபநிடதம்	R.	55
முண்டகோபநிடதம்	R.	56
மாண்டூக்கியோப நிடதம்	R.	57
மாண்டூக்கிய காரிகை	R.	58
ஐதரேயோப நிடதம்	R.	59
தைத்திரியோப நிடதம்	R,	8060
சாந்தோக்கியோப நிடதம்	R.	61
பிரகதாரணிய கோபநிடதம்	R.	62
சுந்தர புராணம் - புதுவுருவம்	R.	63
சுந்தரபுராணம்-பகுதி-2	R.	64
மறத்ரார்த்த வரும்பதம்	R.	65
சுந்தரபுராணம்-பகுதி-3	R.	66

A Descriptive Catalogue of Tamil Manuscripts

VOLUME XXVI

R. No. 7787

இராமாயணத் திரிவேணி (வசனம்) - தொகுதி ஒன்று

IRĀMĀYAṆA -T- TIRIVĒNI (VACANAM) Volume I

Paper : 34·3 × 21·5 cm. Pages : 1—470

Lines 40 on a page. Tamil. Good. New. Extent 12,000 granthas.

Complete

Poet N. Kanagarajaier has furnished an imaginative dialogue among Valmiki, Kambar and Tulsidas on Ramayana. The discussion has been staged before Saraswathi in front of the devas! This discussion is in three volumes; in this first volume is present, 'Balakandam'.

This prose work has been written in 1953.

Beginning

முகவுரை

முனியே நான்முகனே முக்கணப்பா வென்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கட் கருமாணிக்கமே யென்கள்வா
தனியே னாருயிரே யென்தலைமிசை யாய்வந்திட்டு
இனிநான் போகலொட்டேன் ஒன்றும்மாயஞ் செயேயென்னையே.

(நம்மாழ்வார்)

புகழ் பெற வேண்டும் என்று நூல் செய்வார் பலராம். பொருள் தேடுவதற்கு ஒரு வழியென்று நூல் செய்வாரும் உண்டு. இறைவனுக்கு நாம் செய்யும் இந்நூல் ஒரு வழிபாடு ஆகுக என்று கருதியே இயற்றினார் முன்னாளிலே சிலர் இருந்தார். இந்நாளில் அத்தகையர் அரியராயினார். அன்பு நெறி குறைபட்டு, அருள் நெறி மழுங்கி, அறிவு நெறி புழுங்கி, எதையும் எதிர்த்து வாதாடுவார் பெருகி வரும் இந்நாளில், இராமாயணத் திரிவேணி என்ற இந்நூல் இயல்கின்றது.

உலகமே உவந்து அவன் திருவுள்ளம் உலவாதேல் இஃது எழுந்து பயனிலை என்றாய் விடும். அவனருளால் எழும் இப்பணியை அவனே உவந்தருள்க.

ஆழ்வார்கள் வாக்கின் அமைப்பை யறிந்துலகில்
வாழ்வார்கள் நெஞ்சம் மலர்கின்றார் வாழ்வார்
இராமனையே தந்த இயற்புலவர் வாக்கில்
இராமனையே காண்கின்றேன் யான்

18-6-53

— நா. கனகராஜன்

ஸ்ரீ

1. வைகுந்தப் பெருமன்றம்

கலைமகள் துதி

வான்மிகரும் கம்பரும் வண்மைத் துளசியுமே
தேன்மலிய யாத்த திருக்கதையுள் - யான்முயன்று
செம்மை தெளிந்து தெரிவிக்க நாமகளென்
அம்மை யருள்வாள் அருள்.

திருமால் :

அன்பர்களே, அமரர்களே, புலமைப் பெரும் பேறு படைத்த புண்ணியர்களே, உள்ளக் கனிவே உத்தமச் செல்வம் என்று கருதும் நித்ய சூரிகளே, நாம் இங்கு நற்பொருள் ஒன்றை ஆராயலாம் என்று

எண்ணுகிறேன். மனிதவுலகில் வாழ்வார், இங்கு நாம் செய்யும் ஆராய்ச்சியால், அறிவுச் செல்வம் பெறலாம். அன்றியும் இப்புண்ணிய தாமத்தே எத்தனையோ அறிவுடைப் பெருமக்கள் கூடியிருந்தும் அவரெல்லாம், பிறர் நலம் சிறிதும் நினையாது, தமது மனம் கண்ட இன்ப வாழ்விலேயே மயங்கி இருக்கின்றார் என்ற குறையும் நீங்கும்.

நான்முகன்

தந்தாய், எப்பொழுதும் இன்ப வெள்ளத்திலே திளைத்திருக்கும் இப்பெருமக்கள், தமது உள்ளத் தகளியில், அன்பு நெய் இட்டு அறிவுத் திரி அமைத்து, அருட்பெரு விளக்கம் ஏற்றிக் காணும் காட்சியை வாயாற் பேசவும், மனம் இல்லாது வாய் வாளாமை பூண்பார்களே.

திருமால்

இன்றைய மன்றம் நிறைவேறியது

பாலகாண்டம்

1. முதற் செய்யுள்

கலைமகள்

வைகுந்தப் பெருமன்றத்திலே கவிசிகாமணிகள் மூவர் ஒரு பொருளைப் பற்றித் தம்தம் கருத்தை உரைக்கும் போது நடுநிலை தாங்கும் பொறுப்பு எனக்கு வந்துளது. மூன்று பெருமக்களும் என்னை நன்குணர்ந்தவரே.

வால்மீகி

ஆனந்த அனுபவத்தின் எல்லை கண்டு, தன்னையே மறந்து, மயங்கியிருத்தற்குரிய நிலமாகிய வைகுந்தத்திலே இறைவன் திருவருளால் எல்லாம் நிகழ்கிறது. நம் செயல் இங்கு ஒன்றும் இல்லை. நேற்று எம்பிரான் தலைமையில் இங்கு நிகழ்ந்த பெரு மன்றத்தில் இராமாயணமே உலகப் பெருங்காவியம் என்று முடிவு செய்யப்பெற்றது.

End

கலைமகள்

புலமைச் செல்வர்களே! இன்று ஹனுமத் பிரபாவம் சுருக்க மாகவே உரைக்கப்பட்டது. இனிவரும் ஹநுமத் விருத்தாந்த கதரை சகசு இது உபோத் காதமே ஆகும். ஆயினும் இங்கு இப்புனித மூர்த்தியை மூன்று உருவத்திலே விளக்கி, மகிழ்கின்றீர்கள். எப்புறம் நோக்கினும் அவன் செயலே விளங்கும்படி ஆராய்ச்சி நிகழ்த்தினீர்கள். இனிவரும் இரண்டு காண்டங்களும் இப்புண்ணியன் பெருமை விளங்கத் தக்க இடங்களே ஆம். ஆயினும் இக்காண்டத்தில் இராமமூர்த்தியை அவன் கண்டதும், சுக்கிரீவனுக்கு நட்பாக்கியதும், வாலியைக் கொல்வித்ததும், சுக்கிரீவனுக்கு அரசுரிமை வருவித்ததும் நாடெல்லாம் தேவியைத் தேடும் பொறுப்பைப் பல கோடி வானரர் ஏற்றிருப்பினும் அவருள் தானே நேரில் தேவியைக் கண்டு, பிற பொறுப்பையேற்றுக் கொண்டதும், மறந்திருந்த வலிமையைச் சாம்பவான் புகழுரையால் உணர்ந்ததும், உணர்ந்த பிறகு இராம கைங்கரியத்திலே ஈடுபட்ட முறையும் பிறவும் இணையற்ற இவன் சிறப்பை விளக்கவே அமைந்தன.

அவைக்களத்தோர் உள்ள முருகில் சுந்தரகாண்ட விமரிச நாளைத் தொடங்குவதாகுக.

(கு-பு)

இந்நூல் இராமாயணத் திரிவேணி - தொகுதி ஒன்று என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. மொத்தம் மூன்று தொகுதிகளைக் கொண்டு முதலாவதிதுவாகும். வசனநடையாலியன்றதாகும். இது, இராம காதையைச் சிறப்புறப் பாடிய வால்மீகி, துளசி, கம்பர் என்னும் மூவரும், வைகுந்தப் பெருமன்றத்திலே, கலைமகள் தலைமையின் பல கடவுளரும், தேவர்களும் குழுமியிருக்க, கூடி, தத்தம் காவியத்திலே இராம காதையைப் பாடுகையில், வேறுபட்டிருக்கும் இடங்களை எடுத்துக்காட்டி, அவற்றிற்குரிய காரணங்களையும் தகுமுறையில் எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ள நூலாகும். உரையாடல் முறையில் அம்மூவரும் பேசிக் கொள்வதாக, ஆசிரியரால் கற்பனை செய்யப்பட்டு இயற்றப்பெற்றதிதுவாகும். நல்ல நூலாகுமிது. இதன் கண் பால காண்டம் பற்றிய ஆராய்ச்சியை நிகழ்த்தியுள்ளனர்.

ஆசிரியர் நா. கனகராஜையர்; ஊர், புதுக்கோட்டை; காலம்: தற்காலம். இவர் இயற்றிய வேறு நூல்கள், ஆஞ்சநேய புராணம், தோத்திரத்திரட்டு முதலிய பலவாகும். இவற்றால் ஆசிரியரின் அரிய ஆராய்ச்சித் திறனையும், புலமைச் சிறப்பையும் நன்குணரலாம். காண்க.

R. No. 7788

இராமாயணத்திரிவேணி (வசனம்)-தொகுதி இரண்டு
IRĀMĀYAṆA-T-TIRIVĒṆI-(VACANAM)-Volume II

Paper : 34·3 × 21·5 c.m. Pages : 1—472

Lines 40 on a page. Tamil. Good. New. Extent 12000 granthas.

Complete

Continuation of the previous work. This portion is on Sundarakandam and Yuddakandam.

Beginning

சுந்தர காண்டம்

22. கடல் தாவுதல்

கலைமகள்

வித்வந் மணிகளே, பக்த சிகாமணிகளே, திருவாழு மார்பன் தலைமையிலே அவனடிப் போதன்றி வேறு ஒன்றையும் நினையாத அன்பர் அமர்ந்து கேட்க நீவிர் மூவரும் தொடங்கிய இராமாயணத் திரிவேணி இன்று சுந்தர காண்டத்தில் நுழைகின்றது. நேற்றே ஹநுமத் பிரபாவம் விசாரிக்கத் துணிந்ததால் இன்று அதன் தொடர்பாக உள்ள வரலாறுகளே வரவேண்டும். ஆஞ்சநேயன் இராம சேவையில் எப்படி ஈடுபட்டான் என்பதை இக்காண்டம் மிகவும் அழகுற விளக்குவது ஆகும். மற்றக் காண்டங்களைப் போல இதற்குப் பெயர் அமையாத காரணத்தையும் விளக்கி, இராம பக்த சிகாமணி யான அஞ்சனை குமாரன் கடல் தாவிச் சென்ற அழகையும் இன்று விமர்சனம் செய்வீர்களாக.

வால்மீகி

தாயே, எம் உடன் தோன்றும் துணையாய் இருந்து இராம கதையை, உலகம் பெற அருளிய நீயே இன்று சுந்தர காண்ட விமர்சனம் தொடங்க வேண்டும் என்பதால் பால காண்டம் முதல், கிஷ்கிந்தா காண்டம் வரையில் எங்கள் கருத்துக்களை நாங்கள் வெளியிட்ட முறை உன் மனத்துக்கு உவப்பையே தரும் என்று எண்ணி இப்பொழுது சுந்தர காண்டத்திலே பிரவேசிக்கிறோம்.

End

வால்மீகி

இங்கு என்ன மாயச் சூழ்ச்சி நிகழ்கிறது?

கம்பர்

முதற்போரில் இராமன் தலை போல் வித்யுத்ஜிஹ்வன் செய்து வந்து தா இராவணன் சீதையை ஏமாற்ற முயன்றதாக உரைத்துளிர். நான் அங்கு அதனை அனுவாதம் செய்யவில்லை. அதற்கு மாறாகக் கும்பகர்ண வதத்தின் முன் இராவணன் சீதையை மயக்கும் பொருட்டு மாயச்சனகன் ஒருவனை அமைத்துக் கொண்டு அசோக வனத்துக்கு வந்து சில பேசுவதாக உரைத்தேன். இக்காட்சியிலே தேவியின் குண மாண்பு சிறப்புற அமைவது காணலாம்.

கலைமகள்

கம்பன் அமைத்த மாயா சனகப் படலத்தையும், அதிகாய வதத்தையும் அதனையொட்டிய பிற அம்சங்களையும், நாளைக்கே ஆராய்வோம். இன்று கும்பகர்ண வதத்தோடு பூர்த்தியாவதே நியாயமாம் என்று எண்ணுகிறேன். நாகபாட விருத்தாந்தம் முன்பே ஆராயப்பட்டதால் அதைப் பற்றி இனிச் சர்ச்சை நிகழ வேண்டாம். அதிகாய வதத்துக்கு அங்கமாக அமைந்த செய்திகள் எல்லாம் நாளைக்கே விமர்சிக்கப்படலாம்.

(கு-பு)

இந்நூல் இராமாயணத் திரிவேணி - வசனம் - தொகுதி இரண்டு என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இது முன்னூலின் தொடர்ச்சியே ஆகும். இது இராம காதையில், பிரச்னைக்குரிய பகுதிகளை, அதனைப் பாடியுள்ள வால்மீகி, துளசி, கம்பர் என்னும் மூவரும் சேர்ந்து ஆராய்வதாக அமைந்துள்ளதாகும். இப்பகுதியின் கண், சுந்தர காண்டப் பகுதிகளும் யுத்த காண்டப் பகுதிகளும் ஆராயப்படுகின்றன.

ஆசிரியர்:- நா. கனகராஜையர்; ஊர்:- புதுக்கோட்டை; காலம் :- தற்காலம்;. இயற்றிய வேறு நூல்கள் :- ஆஞ்சநேய புராணம் முதலியன. காண்க.

R. No. 7789

இராமாயணத் திரிவேணி (வசனம்) தொகுதி மூன்று
IRĀMĀYAṆA-T-TIRIVĒṆI (VACANAM) Volume III

Paper : 34·3 × 21·5 c.m. Pages : 1–480

Lines 40 on a page. Tamil. Good. New. Extent 12,000 granthas.

Complete

Volume third of the work described under R. 7788. Later part of the Yuddakandam has been thought over here. Period of the work is 1957.

Beginning

38. *அதிகாயவதம்*

கலைமகள்

வித்வன் மண்டல மண்டன மணிகளே. இராவண கும்பகர்ணர், சய விசயரே என்பதையறிந்து கிருஷ்ணாவதார காலத்தில் அவ்விரு வரும் மூன்றாம் முறை பிறப்பெடுக்கும் போது மோக்ஷம் தருவதே பொருத்தம் என்று இருவர் கருதினும் ஒருவர் இப்பொழுதே கும்ப கர்ண மோக்ஷப் பிரஸ்தாபத்தை இங்கு நிவேதித்தது பற்றி அபிப் பிராய பேதம் ஒன்றும் வேண்டா. என்றுமே வைகுண்ட வாசல் காவலராகும் தகுதி வாய்ந்த இருவர் இன்றும் முக்தரே, நாளையும் முக்தரே, நேற்றும் முக்தரே, இடையில் வந்த் இந்தப் பிறவி மூன்றும் ஜீவ ராசிகள் பக்தி மார்க்கத்தை உணர்வதன் பொருட்டுப் பகவான் அமைத்த ஒரு திருவிளையாடலே.

வால்மீகி

இராமகதை ஒரு பெருங்கோயில். அக்கோயிலுள் வழிபாட்டுக் குரிய பிரதானமூர்த்தி சீதாராம விக்ரகமே. ஆலயங்களில் பரிவார தேவதைகள் அமைவது போலச் சீதா காந்தன் சிறப்பை விளக்க வல்ல எச்செய்தியும் அக்கோயில் திருப்பணிக்கு அழகு புரிவதேயாம். சீதையைப் பிரலோபனம் செய்யும் பொருட்டு வித்யுஜ்ஜிஹ்வன் உதவியால் இராவணன் யுத்தாரம்பத்தில் இராமன் தலை போலத் தோன்றும், மாயத் தலையைப் படைத்து வந்த செய்தி என் வாக்கில் வந்தது.

End

56. இராம வைகுண்ட கமனம்

வியாசர்

ஞான வைராக்கியம் அற்றவரும் பக்தியே புணையாகப் பற்றி, ஸம்ஸார சாகரம் கடக்க இயலும் என்று நான் உறுதி கூறுகிறேன்.

நாராயணன்

அன்பர்களே, காவியாலாபம் என்ற காரியம் சிறியது என்று யாரோ சொல்லத் துணியும் இராம காதையை வால்மீகி அழகுக் கொள்ளையாக, அமைத்தார். அதனைப் பின் வந்த கவிகளும் மேலும் மேலும் புனைந்து புனைந்து சிறப்பித்திருக்கின்றார்கள். எப்படி உரைத்தாலும், இராமதத்துவம் தான் அவற்றுள்ளே இருக்கிறது என்ற உண்மையை இந்த ஐம்பத்தாறு சர்ச்சைகளால் நாம் நன்கு உணர்ந்தோம். குசலவர் கானம் செய்ய, இராமனாக அயோத்தியில் இருந்து இக்கதை கேட்ட போது நாம் அடைந்த ஆனந்தத்தை இன்றளவும் மறந்தோமில்லை.

இராம கதை பூமியில் இருக்குமளவும் கலியுகத்தின் சக்திக்கு, யாரும் அஞ்ச வேண்டாம் என்றே கூறுகின்றோம்.

நாரணன் விளையாட்டெல்லாம் நாரத முனிவர் கூற
ஆரண மறிவால் மீகி அமைவுற முன்னே சொற்றான்
பூரண ஞானம் பெற்ற புலவர் பற்பலர் பின் சொன்னார்
ஏரண வதன் கணுள்ள வின்பம் யானுரைப்பதேனோ.

Colophon

ஹேமலம், புரட்டாசி, நவராத்திரி காலம், சப்தமி மூலம். நா. கனகராஜன், 30-9-57

(கு-பு)

இந்நூல் இராமாயணத் திரிவேணி-வசனம்-தொகுதி மூன்று என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இதுவும் முன்னூலின் தொடர்ச்சியே ஆகும். இதன் கண் யுத்த காண்டத்தின் பிற்பகுதிகள், பற்றிய விவாதங்கள் நடைபெறுகின்றன. ஆசிரியர் : நா. கனகராஜையர் காண்க:

R. Nos. 7790-7819 and 7819(a) (One Volume)

Paper: 29.5×23.2 cm. Pages 1-688

Lines 30-50 on a page. Tamil. Good. New. Extent 16,500 granthas

---

R. No. 7790

வால்மீகியும் கம்பரும்-உரையாடல்

VĀLMĪKIYUM KAMBARUM-URAIYĀḌAL

Pages : 1 - 591 Extent 15,000 *granthas*

Complete

Quite interesting discussion on Ramayana has been contemplated by N. Kanagarajaier; the paticipants of the dialogue are Valmiki and Kambar. Author belongs to this 20th century.

Beginning

முகவுரை

முனியே நான்முகனே முக்கணப்பா வென்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கட் கருமாணிக்கமே யென்கள்வா
தனியே னாருயிரே யென்தலைமிசை யாய் வந்திட்டு
இனிநான் போக லொட்டேன் ஒன்றும் மாயஞ்செயேவென்னையே

- நம்மாழ்வார்

புகழ்ப்பொருட்டு நூல் செய்வார் பலர்; பொருள் பெறுங் கருத்தால் இயற்றுவாரும் உளர். இறைவனுக்கு நாம் செய்யும் வழிபாடாக இந்நூல் அமைக என இயற்றினார் அந்நாளிலே பலர் இருந்தார்.

இறைவன் திருவுள்ளத்துக்கு இஃது உவப்பாகுமெனில் அதுவே அவன் பெற்ற பேறாகும்.

ஆழ்வார்கள் வாக்கின் அமைப்பை அறிந்துலகில்
வாழ்வார்கள் நெஞ்ச மலர்கின்றார் - வாழ்வார்
இராமனையே தந்த இருபெரியர் வாக்கில்
இராமனையே காண்கின்றேன் யான்

21-3-49 நா. கனகராஜையர்

வால்மீகியும் கம்பரும்

வான்மிகரும் கம்பரும் வாக்கிறைவி நல்லருளால்
தேன்மலிய யாத்த திருக்கதையுள்-யான் முயன்று
செம்மை தெளிந்து தெரிக்கக் கலைமகளென்
அம்மை யருள்வாள் அருள்.

1. வைகுந்தப் பெருமன்றம்

திருமால் :

அன்பர்களே ! அமரர்களே, புலமைப்பெருஞ் செல்வம் படைத்த புண்ணியர்களே, உள்ளக்கனிவே உயர்பேறு எனக் கருதும் உத்தமர்களே; நாம் இங்கு நற்பொருள் ஒன்றை ஆராயலாம் என்று எண்ணுகிறேன்.

நான்முகன்

கலைமகள் இருவர்க்கும் பொதுவாக, நடுநிலை தாங்க வேண்டும்.

திருமால்

இன்றைய மன்றம் நிறைவேறியது.

2. முதற் செய்யுள்

பால காண்டம்

வால்மீகி

ஆனந்த அனுபவத்தின் எல்லை கண்டு தன்னையே மறந்து மயங்கியிருத்தற்குரிய பெருநிலமாகிய வைகுந்தத்திலே இறைவன் திருவருளால் எல்லாம் நிகழ்கிறது. நம் செயல் என்று இங்கு ஒன்றுமே இல்லை. நேற்று எம்பிரான் தலைமையில் இங்கு நிகழ்ந்த பெருமன்றத்தில் இராமாயணமே உலகப் பெருங் காவியம் என்று முடிவு செய்யப்பெற்றது.

நான் பால காண்ட முதல் உத்தர காண்டம் வரை ஏழு காண்டமாய்ப் பாடியிருக்க, நீர் உமது கதையை ஆறு காண்டத்தில் முடித்து விட்டீர். உத்தர காண்டத்தை இன்னொருவர் பாடியதாகச் சொல்கிறார்கள். எடுத்ததை முடிக்கத் திறமையில்லையோ?

கம்பர்

முனிவர் பெருமானே, எம்பெருமான் திருமுன்பு இன்ப வெள்ளத்திலே திளைத்திருக்கும், எளியேனை இந்த வம்புக்கு இழுக்கும், உமது பெருங்கருணைக்கு நான் ஒரு வணக்கம் செலுத்த வேண்டும். தேவர் மொழி என்று நான் புகழ்ந்து போற்றும் வடமொழியில் பன்னூறாயிரம் கிரந்தங்களையுடைய மூலராமாயணம் ஒன்று உண்டு என்பார்களே; அது பிரம கற்பிதமாமே?

End

40. இராம பட்டாபிஷேகம்

வசிட்டர்

கம்பன் கண்ட இராமன் புதிய மூர்த்தியோ என்று முதலில் நினைத்தேன். என் உள்ளத்திற் கண்ட விக்கிரகமே, அம்மூர்த்தியென்பதை இப்பொழுது உணர்ந்தேன்.

குலசேகரர்

என் வாக்கில் விளையாடிய மூர்த்தியும் அவனே.

நம்மாழ்வார்

நான் இங்கே காணும் திவ்யமங்கள மூர்த்தி வேறு இராமன் வேறு என்று நான் என்றும் நினைக்கவில்லை.

கிருஷ்ணதேவராயர்

அடியேனும் அப்படியே எண்ணுகிறேன்.

கம்பர்

இதுவே பொருளென்று எவர் எது கூறினும், ஏற்பது எது அதுவே பொருளென்று அறிந்து கொண்டேன்.

வால்மீகி

துரீய நாராயணனே இராமன் என்று அறிந்து மகிழ்ந்தேன்.

திருமால்

நாம் தொடங்கிய பேரவை இவ்வளவில் நிறைவேறுகிறது. உலகம் எல்லாம் நலம் பெறுக உயிர் எல்லாம் நலம் பெறுக. கலையும் மொழியும் பெருகி வளர்க. வாழ்க கவியுலகம்.

(கு-பு)

இந்நூல் வால்மீகியும் கம்பரும் உரையாடல் என்னும் பெயர்த்து. முற்றுப்பெற்றது. இஃது, இராமாயணம் பாடியவருள் வால்மீகி, கம்பர் என்னும் இருவரும் தம்தம் நூலில் இராமகாதையைப் பாடியுள்ள முறை பற்றி உரையாடல் மூலம் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. அன்னோர் முதற்செய்யுள், தசரதன் மாண்பு, தேவரகசியம், திருவவதாரம், முனிவர் முயற்சி, திருமணம் முதலிய முப்பத்திரண்டு தலைப்புக்களின் கீழ் தங்களின் மாறுபட்ட கருத்துக்களை விவாதிக்கின்றனர் என்பதாக, இந்நூலாசிரியரால் கற்பனை செய்யப்படுகிறது. உயர்ந்த நூல் வசன நடையாலாயது. ஆசிரியர்: நா. கனகராஜையர்; ஊர்: புதுக்கோட்டை; காலம்: தற்காலம். இயற்றிய வேறு நூல்கள்:- ஆஞ்சநேயபுராணம் முதலியன.

R. No. 7791

சுந்தர புராணம் - தொகுதி ஒன்று

SUNDARA PURĀṆAM - Volume I

Paper: 34·8 × 22·3 c.m. Pages: 1-140

Lines 25-50 on a page. Tamil. Good. New. Extent 2500 granthas.

Complete

This furnishes the life history of Sundaramoorthy Nayanar as told in Periapuranam in verses. This Vol.I contains the first canto and part of the second.

Author N. Kanagarajaier (20th Century)

Beginning

கடவுள் வாழ்த்து

விநாயகர்

1. வேண்டுபவர் வேண்டுவன விழைவினோடு மருள்பவனை
நீண்டபுழைக் கரத்தினனை நெஞ்சமுற நினைகுவமே
தூண்டரிய சோதியினைத் தூதனெனப் போக்கவமை
யீண்டுபுகழ்த் திருத்தொண்டர் இருஞ்சரிதை புகல்வதற்கே.

1. முதற்காண்டம்

1. திருக்கயிலைச் சிறப்பு

11. பெருமையினை யளந்துரைக்கப் பிறந்தவொரு பிறப்பினது
கருமைமுகில் வெளுக்கவொளி கஞலுமுயர் திருமுடிய(து)
அருமையொடு மெளிமையெலாம் அமையுமரன் வீற்றிருக்கும்
உரிமையினைத் தனக்கெனவே யுடையதிருக் கயிலைவரை (க)

12. வேதங்கள் பலபடியே விளம்பமுயல் பரம்பொருளைப்
பூதங்கள் பணிபூண்ட புராந்தகனைப் பொறுப்பதனாற்
காதங்கள் பலகடந்து கருத்தொருங்கு மடியர்கணம்
சாதங்கள் தொடர்வறுக்கச் சாருவது கயிலைவரை (உ)

2. ஆலால சுந்தரர் தோற்றம்

41. அருளி னுருவப் பரஞ்சுடர் தான்
அறிவி னுருவப் ·பெருமாட்டி
தெருளி னுருவே யருளுகெனத்
திருவாய் மொழியான் வினவுதலும்
பொருளி னுருவம் விளக்குவதே
பொருளா லெழுந்த திருவாக்கான்
மருளி னுருவம் வேரறவே
வழங்கும் வரலா றிசைத்திடுவோம்.

42. இமய வரையின் பூங்கொம்பே
இடப்பால் நிறைந்த திருவாட்டீ
சமய வகைகள் தெளிவரிய
தவத்தி னுருவாம் தனிச்செல்வீ
கமையு மெழிலு முருவானாய்
கனிந்த வுளத்துத் திருத்தொண்டன்
அமைய வுலகில் வாழ்ந்து நமை
யடைந்த வரலா றுரைக்கின்றேன்

2. இரண்டாம் காண்டம்

1. திருவவதாரம்

229. அருளுருவப் பரம்பொருளி னாணையினாற்
கயிலைவரை யகன்று பூவிற்
பொருளுருவப் பிறப்பெடுத்த வாலால சுந்த
ரர்க்குப் பொருந்து பெற்றோர்
இருளுருவப் பசுநிலைமை பதியருளா
லகலுமென இனிது நோற்ற
தெருளுருவத் திருவர் செயல் ஒருவாறு முறைய
றிந்து தெரிக்கலுற்றாம்

End

4. திருப்பாச்சிலாச்சிராமத்துப் பொன் பெற்றது

852. அன்புள மனத்துத் தோழும் பரைம் பிறவாம்
அருமறை பரவிய பதிகள்
நன்புற வழைப்பான் திருவுளம் கொளுமோர்
நம்பனு மவர விழைந்தனவே
பொன்பெற வுதவி யவருவந் திசைத்த
பொருவிலாப் பதிக மேற்றருளி
வன்புள னிவனோ வருளுரு வெனவே
வருபவர் மதித்திட விருந்தான்

853. பிரியவே மனத்துத் துணிவுறா நிலையிற்
பிரிந்தனர் பாச்சி யாச்சிராமம்
அரியநா வுடைய நாவலூர் நம்பி
அவனையே நினைந்தனர் நடப்பர்
பெரியவோ வுலகிற் பரம்பொருள் அருளே
பெறுவர்க் கெவ்வகை நலமும்
அரியவோ வெனவே யாவரு முணர
அகமலர் மலர்வுற அகன்றார்

(கு-பு)

இந்நூல் சுந்தர புராணம் - தொகுதி ஒன்று என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இது பெரிய புராணத்துட் கூறப் பெற்ற சுந்தரருடைய வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, வேறு வகையாகப் பாடப் பெற்றதாகும். மொத்தம் மூன்று தொகுதிகள் உள. இம்முதற்றொகுதி, முதற் காண்டத்தையும், இரண்டாங் காண்டத்தில், நான்காம் பகுதி வரையும், உள்ளடக்கியுள்ளது ஆகும். ஆசிரியர்:. நா. கனகராஜையர்; ஊர்:- புதுக்கோட்டை; காலம்:- தற்காலம்.

R. No. 7792

சுந்தர புராணம் - தொகுதி இரண்டு
SUNDARAPURĀṆAM - Volume II

Paper : 34·3 × 21·5 c.m. Pages : 141-326

Lines 25-50 on a page. Tamil. Good. New. Extent 3750 granthas.

Complete

Middle portion of the work described under R. 7791 above; this possesses the last part of the second canto, third canto and the first part of the fourth.

Beginning

2. இரண்டாம் காண்டம்

5. ஆற்றில் இட்டுக் குளத்தில் எடுத்தது

857. திருவெண் ணீற்றின் ஒழு கொளியான்
திருவேணியினி லரவணி வான்
வரும் வெண் ணீர்த்த கங்கையினை
மடக்கி முடியில் நிறுத்தியவன்
கருமைந் நீலக்கடு விடத்தைக்
களத்தே யடைத்த கருணையினான்
உருவெண் ணீரத் திருத் தொண்டர்
உளத்தே யிருந்தான் வழி விளக்கா

858. அவனை யறிவார் அவனிடத்தே
அமரு மன்னை யருளறிவார்
சிவனை யலது பிறவுருவைச்
சிறிதும் நினையாச் சிந்தையினார்
உவமை யிலாத அவனுருவை
உலக முணர விளக்கிடுவான்
தவனை யெடுத்த சுந்தரனார்
தம்மை மறந்து நடக்கின்றார்

3. மூன்றாம் காண்டம்

1. சங்கிலியார் பிறப்பு

1177. தலைமை யளித்த பெருமானைத்
தமிழாற் பராவும் வன்றொண்டர்
புலமை யனைத்து மவன்புகழே
புகலப் பொருத்தி நடக்கின்றார்
நிலைமை விளங்க உடுப்பூரில்
நிலமே வணங்கப் பிறந்ததொண்டர்
தலைமை பெறவே யிடந்தந்த
தலத்தை யணுக வடைந்தனரே

End

4. நான்காம் காண்டம்

1. சேரமான் தோழர்

1701. எத்தனை நாள் இருந்தாலும் எத்தனை நாள்
திருவாரூர் இறைவன் தன்னைப்
பத்தரொடு பணிந்தாலும் புகழ்ந்தாலும்
தமிழ்ப்பனுவல் பாடினாலும்
அத்தனையும் பற்றாவே யெனவுரைத்தே
நினைப்பிருந்தும் அயலேயுள்ள
சித்துமலி தலங்களையும் கண்டுதொழச்
சேரலர்கோன் சித்தம் கொண்டார்

1702. சேரரோடு சிவபதத்தைத் தலந்தோறும்
வழிபடவே செல்வேன் யானே
பாரகமும் விண்ணகமும் பரவும்வன்
பூண்டிருந்த படிவம் எல்லாம்
ஆரண நாள் மறை முழங்கும் தலங்களிலே
காண்பதற்கே அவாவும் கொண்டேன்
சீரமைந்த திருப்பாவாய் விடைதருதியென
வேண்டிச் சென்றார் அன்றே.

(கு-பு)

இந்நூல் சுந்தர புராணம் தொகுதி இரண்டு என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இது முன்னூலின் தொடர்ச்சியேயாகும். இது சுந்தரரின் வரலாற்றை விளக்குவது ஆகும். இதன் கண் இரண்டாம் காண்டம், ஐந்தாம் பகுதி முதல் நான்காம் காண்டம் முதல் பகுதி முடியவுள்ளது. ஆசிரியர்:- நா. கனகராஜையர் காண்க.

R. No. 7793

சுந்தர புராணம் - தொகுதி மூன்று

SUNDARA PURĀṆAM - Volume III

Paper : 34·3 × 21·5 c.m. Pages : 327 380

Lines 25-50 on a page. Tamil. Good. New. Extent 1,000 granthas.

This is the last volume of the Sundara Puranam spoken above. With this the 2100 verses come to an end. This end part of the Puranam has been executed in the year 1952.

Beginning

4. நான்காம் காண்டம்

2. இருவர் தல யாத்திரை

1703. திருவாரூர்ப் பூங்கோயிற் சிவபரத்தை யிருவருமே
பருகார் வத்துடன் பணிந்து பரவசத்தாற் பாட்டிசைத்தார்
உருகாரு முருகவரு முருக்கமுள திருப்பதிகம்
திருகாத திருவுளத்துச் சேரர்பிரான் கேட்டனரே

1704. அடியேனு மாண்டவனுக் கமைடவொரு பாட்டிசைத்தேன்
அடிகேள் நீர் கேட்டருள்க ஆண்டவனைக் கேட்பிக்க
முடியாத முதல்வனுக்கு மும்மணிக் கோவையை யிசைக்கும்
படிவாழ்வு சிறியேற்கும் பாலித்தா னவனன்றே.

4. ஆறலைத்த அருள் திறம்

1898. பொன்னிபாய் வளமுட்வெற்பாற் பொலிவுறு சிறப்பும் பூண்டு
சென்னியர் நாட்டிலுள்ள திருவொடு சேர நாட்டின்
மன்னிய சிறப்பும் வாய்ந்த வளமலி கொங்கு நாட்டில்
அன்னிய நினைவே யின்றி அமலனை நினைவார் வந்தார்

End

7. திருக்கயிலை மீட்சி

2099. இன்ன குன்றினில் நங்கண நாதராம் இறைமை
மன்ன வாழ்குவர் இருவிரும் கணங்களே வணங்க
இன்ன லின்றிய லின்பமே யுமக்குள தினியே
என்ன வோதின்ன கயிலையம் பெருவளர்க்கிறையே

2100. வாழ்க வாழிய சுந்தரம் பெருந்தகை மகிமை
வாழ்க வாழிய வவர்தரும் தமிழ்மறை வளமே
வாழ்க வாழிய தமிழகம் பெறுந்தவ மலிவே
வாழ்க வாழிய கயிலையம் பொருப்புறை வனப்பே

Colophon :

சிவமயம்
22-4-52
பூர்த்தி. நா. க.

(கு-பு)

இந்நூல் சுந்தர புராணம் - தொகுதி மூன்று என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இதுவும் முன்னூலின் தொடர்ச்சியே ஆகும். சுந்தரரின் வரலாற்றை விளக்குவது. இதன் கண் நான்காம் காண்டம். இரண்டாம் பகுதி முதல் ஏழாம் பகுதி முடியவுள்ளது. ஆசிரியர்:- நா. கனகராஜையர்.

R. No. 7794

பிரபந்தத் திரட்டு - தொகுதி ஒன்று

PIRABANDHA-T-TIRAṬṬU - Volume I

Paper : 32·8 × 21 c.m. Pages : 1—385

Lines 36 on a page. Tamil. Good. New. Extent 5,500 granthas.

Complete

This is a collective volume of 41 different literary pieces of various genres, all by N. Kanagarajaier. Medium. verse.

Author belongs to the present century.

Beginning

1. மனீஷா பஞ்சகம்

காப்பு

உலகமுய வத்துவித வுண்மை கொடுத் தாண்ட
குலவுபுகழ்ச் சங்கரனார் கோளா - யிலகுமைந்து
செய்யுள்களி னுட்பொருளைச் செந்தமிழாற் செப்பவருள்
செய்யுமொரு கொம்புடைய தேவு.

நூன்முகம்

பவப்பிணிக்கு மருந்தருளும் பரம்பொருளைப் புலையுருவிற்
பண்டோர் நாளிற்
றவப்பெரிய சங்கரனார் காசியிற்கண்டக லெனவே சாற்ற வன்னான்
சிவப்பொருளா மறிவினுரு வறிவுருவிரு விலகெனவே செப்பினாய்
கொல்
அவப்பொருளா மன்மைய வுடலினையே சொற்றனை கொல் அறைதி
யென்றான்

நூல்

1. நனவு கனவருந் துயிலி லெவ் வறிவு
விளக்கமுற நலக்கத் தோன்றும்
குனிவில் பிரமாதி யெனும் பிறாய வுடலனைத்தும்
குலவா நிற்கும்
புனிதமுறு மல்வறிவி னுருவமுளேன்
புலனுணரும் பொருள் களா கேன்
எனவுணர்வோ னிருபிறப் போனெனும் புலைய
னெனுங் குருவா யெண்ணினேனே

5. சுரபதி முதலோர் பரம்பொருளின்பக்
கடலொடு துனியினின் மகிழ்வர்
வரமுனி யின்ப வளத்தினை யடைந்து
· சங்கற்ப மின்மன மகிழ்வான்

விரிபரப் பிரம வானந்த மடைந்து வேறிலா
தன்னதே தானாய்த்
தெரிபலன் அமரர் வணங்குதற் குரியன்
திடமுற வின்னதென் கோனே

(கு-பு)

இச்செய்யுள் கொடுமுடியை யடுத்த ஊஞ்சலூரில் சிருங்ககிரி ஜகத்குரு சந்திரசேகர பாரதிஸ்வாமிகள் திருமுன்பு அரங்கேறினது. சங்கர பஞ்சகமும் இக்காலத்தில் இங்கு அரங்கேறியது. நாள் இன்ன தென்று தெரியவில்லை. 1924, 1925 (செய்யுள் ஏழு)

வாழ்த்து

15. அறம்வாழி சங்கரர்சொல் அத்துவிதம் வாழி
அதுமதமும் வாழி அருளும் - திறம்வாழி
ஆரியவா சாரம் வாழி அருளெணறியின்
வீரியமும் வாழி மிகுந்து

(செய்யுள் எட்டு)

27. தெய்வம்

கிளிக்கண்ணி

573. அன்புருவான தெய்வம் - கிளியே
ஆனந்த மான தெய்வம்
இன்புரு வான தெய்வம் - கிளியே
எங்கும் நிறைந்த தெய்வம்

574. உலகம் படைத்த தெய்வம் - கிளியே
உயிரைப் படைத்த தெய்வம்
உலகுயி ரான தெய்வம் - கிளியே
உள்ளே ஒளித்த தெய்வம்

575. எல்லாம் அறிந்த தெய்வம் - கிளியே
எல்லாமும் வல்ல தெய்வம்
நல்லார் அறிந்த தெய்வம் - கிளியே
நாமும் அறிகு வமே

584. கண்ணுக் கினிய தெய்வம் - கிளியே
காதுக் கினிய தெய்வம்
எண்ணுக் கினிய தெய்வம் - கிளியே
எங்கும் நிறையும் தெய்வம்

585. பாட்டுக் குருகும் தெய்வம் - கிளியே
பாடிப் பிடித்த தெய்வம்
தேட்டுக் குரிய தெய்வம் - கிளியே
சிந்தை நிறைந்த தெய்வம்

586. காலம் கடந்த தெய்வம் - கிளியே
கன்ம மொழிந்த தெய்வம்
ஞாலம் கடந்த தெய்வம் - கிளியே
ஞானமே யான தெய்வம்

Colophon

இயன்றது 8-10-57

End

48. திருநாராயணபுரம் பிரபந்தங்கள்

ஸர்வஜித் வருஷம் ஆனி மீ 4 உ புதன்கிழமை இரவு 7-30 மணிக்கு ஸ்ரீ சந்நிதியில் தலத்தார் கேட்க அரங்கேறிய சிறப்புடையன. 18-6-47

திருநாராயண சதகம்

காப்பு

பெருமான் அடியருளப் பேருங் கழலான்
திருநாரண புரத்துத் தேவன் - திருவோடு
அடிமை துதி யேற்றருள அன்பாலருள்வான்
குடிமையுயர் சேனையர்தங் கோன்

நூல்

1. புவிமகளும் திருமகளும் பொருத்தமணம் புவிந்தருளும்
செவிகழல்கள் ஆயிரங்கொள் தேவர்பிரான் மறைமுடியில்
சவியுறவே பொலிவுறுவான் தமிழ்த்திருநா ரணபுரத்தே
குவியுளத் தார்க்கு குறுபொருளாக்கு தொழுதிருநாரணனே

10. கருநடமே தாய்மொழியாக் கருதுபவர் நாட்டினிடைப்
பெருமையொடு தமிழ்வழங்கப் பெறுதிருநா ரணபுரத்தே
அருமைபொலி திருக்கோயில் ஆதரித்து வீற்றிருப்பான்
திருமகள்வாழ் மார்புமுள தேவி திருநாரணனே.

வாழ்த்து

அன்புருவம் வாழிய அன்புணர்வார் வாழிய
இன்புருவம் வாழிய எண்றடைவார் துன்பொழிக்கும்
வள்ளல் திரு நாரணமா புரத் தோன் வாழியன்பர்
உள்ள மலர் கோயி லுவந்து

இராமானுஜ மாலிகை

காப்பு

தத்துவங்கள் மூன்றுந் தவத்தால் உணர்ந்துலகம்
முத்திநெறி காணும் முறை வகுத்த - நத்துப்
படையவன் ஞான பரம்பரையைப் போற்றி
உடையவர் சீர் சொல்வாம் உவந்து

நூல்

1. அருமையி பனடையு மந்திரப் பொருளை
அதன்சிறப் பறிதரற் கமைந்த
பெருமையு முளத்தின் பக்குவ நிலையும்
பெறாதவர்க் கிசைத்திடே லெனவே
ஒருமைய குரவர் ஆணையிட் டிருந்தும்
உலகெலா மதுபெற வருளி
இருமையு மடைந்த வுடையவர் கழலை
இறைஞ்சுதும் நாரண புரத்தே

12. இடைக்குல மிலம்யாம் வழிவழி யடிமை
யெமக்குள குறை செவிக்கொளவே
படைக்கல மெனவே திகிரி சங்கேந்தும்
பகவநின் கடமையாமெனவே
அடைக்கல மடைவார் அனைவர்க்கு மமைந்த
அருள் வெள்ளம் தருவதற் காகும்
நடைக் கலடி வெத்துடையவர் கழலை நாடுதும்
நாரண புரத்தே

வாழ்த்து

திருநா ரணபுரத்துச் செல்வ வுருப்பிள்ளை
வருமா தவம் புரிந்த வள்ளற் - பெருமான்
இருமா மறை தேரும் எதிராண் வாழ்வ
பெருமை யுலகம் பெற

Colophon

நா. கனகராஜையர்
18-6-47
பிரதி
6-2-58

(கு-பு)

இந்நூல் பிரபந்தத் திரட்டு - தொகுதி ஒன்று என்னும் பெயர்த்து. முற்றுப்பெற்றது. இத்தொகுப்பின் கண் நாற்பத்தெட்டு சிறிய, தோத்திர, மற்றும் சில பொதுவான விடயங்களைக் குறித்த நூல்கள் அடங்கியுள்ளன. பெரும்பான்மையும் திருமால் தோத்திரங்களே ஆகும். வெவ்வேறு ஊர்களில் கோயில் கொண்டிருக்கும் பெருமானைப் பற்றிப் புகழ்ந்து பாடப் பெற்றிருக்கின்றது. முதல் நூல் குரு வணக்கமாக வமைந்துள்ளது. இத்தொகுப்பில் அடங்கியுள்ள நூல்களின் வரிசை அடியிற் கொடுக்கப்பட்டுள்ளது. அது வருமாறு :-

1 மனிஷா பஞ்சகம்
2 சங்கர பஞ்சகம்
3 மூவர் மும்மணிக் கோவை
4 பரம் பொருள் துதிகள்
5 பரப் பிரமப் பதிகம்
6 பொதுக் கடவுள்
7 ஆளுடை நம்பி கோவை
8 காலடி யிரட்டை மணிமாலை
9 ஆரி யாம்பை துதி
10 பொருளாட்டி முருகன் பதிகம்
11 பொங்கற் றிரு நாள்
12 முருக முத்தகத் திரட்டு
13 பழனி நவ காரிகை மாலை
14 முருகன் சரண பஞ்சகம்

15 பொது வணக்கம்
16 மீனாக்ஷி துதி
17 கலைமகள் பஞ்சகம்
18 நாமகள் நவகாரிகை மாலை
19 கலைமகள் திருமகள் இணைமணிமாலை
20 பழனி ஒருபா ஒருபஃது
21 திருவரங்கர் பதிகம்
22 அகோபில நரசிங்க தசகம்
23 திருநரசிங்கன் திருப்புகழ்
24 திருவரங்கர் சரண பஞ்சகம்
25 பாரத தேசீய கீதம்
26 பொதுக் கடவுள்
27 தெய்வம்
28 மதுரைக் கயற் கண்ணி மாலை
29 அகிலாண்ட நாயகி துதி
30 பெரிய நாயகி துதி
31 பெரிய நாயகி மாலை
32 திருமகள் துதி
33 திருமகள் கழல் மலர் மாலை
34 பழனி ஆண்டவன் பதமலர்மாலை
35 சொக்கன் திருவடி மாலை
36 தேவி திருவாயிரம்
37 புதிய திருவுந்தியார்
38 பம்பாய்ப் பிரபந்தங்கள்
39 பம்பாய் சங்கர ஜயந்தி
40 அனுமான் துதிகள்
41 மீராபாய் பாடல்
42 காசிப் பிரபந்தங்கள்
43 சியாமள நகரப் பாடல்
44 கூத்தனூர்க் கலைமகள் பஞ்சரத்னம்
45 நமச்சிவாய மாலை
46 அஷ்டாக்ஷர மாலை
47 ஷடாக்ஷர மாலை
48 திரு நாராயணபுரம் பிரபந்தாவலி

இப்பிரபந்தத் திரட்டைப் பாடிய ஆசிரியர், திரு. நா. கனக ராஜையர் எம்.ஏ. ஆவார். இவரது ஊர்:- புதுக்கோட்டை; காலம்:- தற்காலம், இந்நூலாசிரியர் இயற்றிய வேறு நூல்கள்:- ஆஞ்சநேய புராணம், இராமாயணத் திரிவேணி முதலியன.

இந்நூல்களால் ஆசிரியரின் புலமைத் திறனும், பக்திச் சிறப்பும் நன்கு வெளியாகின்றன. இவர் வேறு சில உரைநடை நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். நல்ல தொகுப்பு நூலாகுமிது.

— —

R. No 7795

பிரபந்தத் திரட்டு - தொகுதி இரண்டு

PRABANDHA-T-TĪRAṬṬU - Volume II

Paper : 34·3 × 22·3 c.m. Pages : 1-379

Lines 38 on a page. Tamil. Good. New. Extent 7500 granthas.

Complete

Volume second of the type noted before by the same auther, N. Kanagarajaier. Here present are 64 individual literary poetic works, all in his own hand writing.

Beginning

1. சங்கராவதார தத்வம்

ஸ்ரீ சங்கர குருவர அவதார தத்வ தர்சினி

காரைக்குடி 7-12-57 குருவரர் திரு முன்பு அரங்கேறியது.

காப்பு

விநாயக மூர்த்தி

1 ஒருமை யுலகுணர வோதவந்த வாசான்
பெருமை சிறிதுணர்ந்து பேச - இருமைக்
கழல்துணையா நல்கும் கணபதியைப் போற்றி
அழகுபொலி வாக்கெய்த லாம், (க)

நூல்

4 திருமலிந்த சேரலர்தம் நாட்ட கத்திற்
காலடியிற் சிறப்பத் தோன்றும்
அருண்மலிந்த வண்மையுருத் தாங்குகுரு
சங்கரரை அவனி மாதா
உருமலிந்த தவப்பேறு யடைந்ததனை
உலகுபெறும் ஒருமை வாழ்வை
பொருண்மலிந்த மொழியானே விளக்கியுரைத்
துணர்த்துவது புலமைப் பேறே, (க)

5 பிறவியினைப் பிணியென்ப வப்பிணியின்
பீழைகளைப் பெருக்கிச் சொல்ப
இறவியினைத் துணையாக வுடையதனை யிழித்
துரைத்தல் இயைபே யென்ப
துறவியுருப் புனைந்தகுரு சங்கரனார் விளக்கி
யருள் சுருதித் தேற்றம்
மறவியறப் பெறுபவரே யிவ்விருமை
பொய்ம்மையென மனங்கொள் வாரே (உ)

22 அமுதமய வறிவருளும் ஆன்ம குரு
மூர்த்தியென அவனி மீது
குமுதமுத லியமலர்கள் கூம்பவரு
கமலமெனக் குரைத்தான் வந்து
சுமுகமொடும் அத்துவித மருள்குரவர் சங்கரர்தம்
சொரூபம் தேறும்
அமுதநிலை யெமக்குளதோ வெனவறிஞர் நினை
வதுண்டே அவசத் தோடே

23 பரமனவ னியான்சிறியன் எனுநினைவு
கழன் றொழியும் பரிசுதேற்றும்
பரமகுரு சங்கரரை நினையாத மனத்த
கத்தே பண்பு முண்டோ
வரமவர்தம் திருநாம முரைப்பதுவே யென
வுணரா வாக்கும் வாக்கோ
சிரமவர்தம் திருவடிக்கே வீழாத சிறுமையி
னும் சிறுமையுண்டோ?

47. மழை வேண்டும் பாட்டு

1252 பொங்கும் திருவருளைப் பூண்ட பரம்பொருளே
எங்கும் நிறைந்த இறைவனே - மங்குல்
பொழிய வருளிப் புதுவையினைக் காத்தல்
தழுவுநின தியல்பு தான்

1253. விண்ணகத்தே எண்ணிறந்த மேகங்கள் கூடுகின்ற
கண்ணகத்தே காட்டிக் கரக்கின்ற மண்ணகத்தே
மக்கள்மனம் வாடுதலை வள்ளால்நீ நோக்கிநிற்றல்
தக்கதல நீயே சரண்

1254. சான்ற பெரியோர் தவச்செல்வம் பெற்றதனாற்
றோன்று புகழே சுடர்கின்ற - தோன்றல்
புதுவியிறை நாட்டிற் பொழிக மழையென்று
விதுவணிந்த தேவே விதி

1268. நல்லறங்கள் செய்துமனம் ஞானநெறி நாடுகின்ற
வல்லவர்கள் வாழும் வளநாட்டில் - செல்லடைந்து
மிக்கமழை பொழிய வேண்டுமென வெம்பெருமாள்
தக்கவருள் பொழிக தான்.

1269. நிலங்கள் மழைஇன்றி நெல்லின்றி நிற்கக்
குலங்கள் வளர்தமிழர் கோமான் - நலங்கள்
எவையும் நிறைத்தாள் இரங்கும் இறையே
குவியும் முகில்வெள்ளம் கொடு

1270. கவிச்செல்வம் தந்தென்னைக் காத்தருளும் தேவே
புவிச்செல்வம் ஆளும் புதுவை - அவிச்செல்வம்
தேவர்பெறவே செழிக்க மழை வளத்தால்
யாவர் நலமும் இயைந்து

End

64. ஒன்றே கடவுள்

1. ஒன்றே கடவுள் உருவம் பலவாக
நின்றே விளங்குவது நேரேசென் - றின்றே
அதனைப் பிணிப்பான் அடைந்தாரு மில்லை
மதனைத் துறந்தாரு மன்

2. மன்னைக் கிளவி வழங்க வுலகத்தே
கொன்னைத் தெளியாக் குடிபலவே - தன்னை
உணர்ந்தபின் பன்றோ உணரலா மொன்னறே
அணந்தபின் புண்டோ அவா

3. அவாவுறுக வென்றே அருந்தவத்தைப் பூண்டு
சிவாகமமும் வேதமும் தேற்றும் - தவாவுருவை
உள்ளத்தே தேர்ந்தார் ஒருமை தெளிகின்றார்
கள்ளத்தே மாயார் கரைந்து

8. நெடியோன் எனச்செப்பு நேயத்தார் சில்லோர்
அடியேன் எனவே அடைந்து - படிமேலே
எங்கெங்கு நின்னருளைப் பெய்தவல ஞானியையே
தங்கும் தளியென்பாள் தான்

9. வணங்கு நர்க்கும் வாழ்த்துநர்க்கும் வாக்குமனமும்
இணங்கு முருக்கொண்ட இறைவன் மணங்குலவு
மாலையோ வேண்டு மவுத்தையன்றோ வேண்டுகின்றான்
காலையே மாலையே கண்டு

10. வேண்டாத வாழ்வில்லை வேண்டியனவே யத்ரவேல்
நீண்டாணை யேசு நிலையுள்ளோம் ஆண்டான்
அவனென் றறிந்து மடங்காத நெஞ்சுள்
சிவனென்று முண்மை தெளிவு

(கு-பு)

இந் நூல் பிரபந்தத் திரட்டு-தொகுதி இரண்டு என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இது முன்னூலின் இரண்டாம் தொகுதியே ஆகும். இத்தொகுப்பின்கண் அறுபத்து நான்கு சிறிய நூல்கள் அடங்கியுள்ளன. அவை வெவ்வேறு பொருள்களைப்பற்றி, வெவ்வேறு சமயங்களில் ஆசிரியராலியற்றப் பட்டவையாகும், பெரும்பாலன கடவுளர் தோத்திரங்களே ஆகும். முதனூல் ஆசிரியர்தம் குருவாகிய சங்கரரின் மேல் பாடப்பட்டதாகும்.

இத்தொகுப்பின் கண் அடங்கிய நூல்களின் வரிசை அடியிற் கொடுக்கப்பட்டுள்ளது:-

1. சங்கராவதார தத்வம்
2. சங்கர பாதுகா மாலை
3. திரிபுர சுந்தரி துதி
4. சங்கரர் துதி
5. சங்கரர் நெஞ்சு விடுதூது
6. கயற் கணி மாலை
7. திருவேங்கட மாலை
8. கேதார அபிடேக மாலை
9. சாமிநாத தேசிகர் தமிழற மாலை
10. மாணிக்க விநாயகர் மாலை
11. உச்சிப் பிள்ளையார் பதிகம்
12. அன்ன தான பலன்
13. குழந்தை
14. மயிலும் குயிலும்
15. கவிஞன்
16. ஆடு மயில்
17. குயில்

18. கருணைக் கடல்
19. தாயும் மக்களும்
20. கிழவனும் குமரனும்
21. பெரியநாயகி துதி
22. மதுரைத் தமிழ்ச்சங்க வாழ்த்து
23. ,, ,,
24. தோட்டப்பாட்டு
25. கீதாப் பிரவசன வாழ்த்து
26. தியாகராசன் வாழ்த்து
27. தாயும் மகனும்
28. திருவாலங்காட்டுப் பட்டயம்
29. வாத்திமைச் சங்க வாழ்த்து
30. ,, ,,
31. ஆசுகவி
32. பொள்ளாச்சி மழைப் பாட்டு
33. வாழைக் கன்று
34. சிறுவன் சீற்றம்
35. லஜபதி கையறு நிலை
36. யதீந்திர நாததாஸ் கையறுநிலை
37. சித்தூர் பாடசாலை தருமப்பாடல்
38. சீட்டுக் கவிகள்
39. யூனியன் பாங்கு வாழ்த்து
40. பொங்கற் பாட்டு
41. ஐந்தாம் ஜயார்ஜ் சரமகவி
42. கோயில் வாயில்
43. விஜய நகர மகிமை
44. கம்பர் திருநாள்
45. அகத்தியர் திருநாள்
46 கலைமகள் கோயில்
47. மழை வேண்டும் பாடல்
48. புது முயற்சி
49. உபாத்திமைச் சங்கம்
50. தீபாவளிப் பண்டிகை
51. சாரணச் சிறுவன்

52. நவராத்திரி வாழ்த்து
53. ,, ,,
54. அன்பர் இருவர் பாடல்
55. மாங்குடியாண்டவன் நான்மணி மாலை
56. சவுந்தர நாயகி மாலை
57. கம்பர் பிள்ளைத்தமிழ்
58. திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ்
59. சங்கரர் பிள்ளைத்தமிழ்
60. நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ்
61. தமிழ்மகள் பிள்ளைத்தமிழ்
62. கண்ணபிரான் பிள்ளைத்தமிழ்
63. சங்கர குருவர சந்திர கலாமாலை
64. ஒன்றே கடவுள்

இவ்வரிய திரட்டைப் பாடிய ஆசிரியர் திரு. நா. கனக ராஜையர் எம்.ஏ. ஆவார். ஊர்:- புதுக்கோட்டை: காலம்:- தற்காலம்; இவரது வேறு நூல்கள்:- இராமாயணத் திரிவேணி, ஆஞ்சநேய புராணம் முதலியன. இப்பிரபந்தத் திரட்டால் ஆசிரியரின் அறிவுத் திறனும், புலமைச் சிறப்பும் வெளியாம்.

R. No. 7796

சூர சங்காரப்பரணி

SURA SAṆGĀRA-P-PARAṆI

Paper : 32·7 × 20·8 cm. Pages : 1—170

Lines 36 on a page. Tamil. Good. New. Extent 3,400 granthas.

Complete

All these 2132 couplets, composed by N. Kanagarajaiar (20th century) purport on a particular portion, nemely the murder of Sura of the Kandapuranam.

Beginning

முருகன் திருவருள் துணை
சூர சங்காரப் பரணி
முதலாவது
கடவுள் வாழ்த்து
விநாயகன்

1. பிரணவமெய்ப் பொருளுருவம் பிறங்குமொரு பிள்ளைகழல்
சரணமெனப் பேணுமுயர் தவப்பேறு புனைவேமே.

2. அறிவுருவப் பரம்பொருளுக் கறிபொருளை யறிவுறுத்த
சிறியகுழ வுருவமுள செம்மல்கழல் வாழ்கெனவே.

அவையடக்கம்

29. அளவு ளடங்காப் புகழாளன் அறிவுளடங்காத் திறலாளன்
அறிவர் அறியா ஆற்றலினான் அருளின் கடலே யுருவானான்
களவுகற்பா நெறிவிளக்கக் காதல்இருவர் கரம்பிடித்த
கந்தன் குமாரன் சமர்த்திறத்தைக் கவிதை யடக்கத் துணிவாரோ

இரண்டாவது
கடைதிறப்பு

31. குமரன்வீர தையினுருகுவீர் மகிழ்வு குலவுவீர் நலமுமிகவுளீர்
அமரநாடுதகு மயிலைவென்ற விழியரின்வமீர் கடைகள்திறமினோ

32. அஞ்சைவென்ற தவமுனிவ ரெய்தரிய அவனை நாடியுமையருவீர்
விஞ்சைநா டுடையவஞ்சுயீர் ஒளியின்விஞ்சுவீர் கடைகள்
திறமினோ

33. சித்தமொன்றி யொருசெம்மைநல் லுருவுதேடியே யணைய
முயலுவீர்
சித்தமங்கையீர் தவங்கனிந்துமலி திருவினீர் கடைகள்திறமினோ

வேறு

34. சந்தமொடு பாடல் பயிலின்ப மலிவாழ்வு புனைதண் குழலின்
மென்மயிலனீர்
கந்தருவ நாடுடைய மங்கையிர் விரைந்து கதவந் திறமினோ
திறமினோ

35. ஆரணமு மொதியதனுட் பொருளறிந்துமகிழ் அன்பினரையின்
பொடுதழுஉம்
சாரண மடந்தையிர் நுமேர்மலி மணைக்கதவு தாழ்திறமினோ
திறமினோ

ஒன்பதாவது
திருவவதாரம்

470. ஒருமுகமா மறைமுடியி னுறுபொருளை விளக்கி
யருளொருமை மூர்த்தி
அருமகவா யறுமுகனா யவதரித்த வரலாற்றை
அறையப் புக்கேம்

471. வருந்துயர் புகன்றபல பேய்களையும்
கருணைவிழி மலர நோக்கிப்
பொருந்துநலம் விரைந்துவரு மெனவிறைவி
புகன்றமொழி புகல்வேம் யாமே

End

பதினான்காவது
வாழ்த்து

2128. உலகம் வாழ்க உயிரினம் வாழிய உயிரி
னுள்ளுயிர் உண்மையில் வாழிய
நலமும் வாழ்க நலமுளர் வாழிய ஞானம் வாழிய
ஞானியர் வாழியே

2129 வேதம் வாழ்க விழுப்பொருள் வாழிய விண்ணம்
வாழ்க விபுதரும் வாழியே
நாதம் வாழ்க நவில்கலை வாழிய நாதன்
பாத நளினமும் வாழியே

2130 தெய்வ மேற்ற திருமுறை வாழிய சேயின் சீர்
சொல்திருப்புகழ் வாழிய
சைவமேற்று தமிழ்மறை வாழிய சாத்த தந்திரம்
தன்மையின் வாழியே

2131 ஒருமை வாழ்க உயிர்ப்பன்மை வாழிய
ஓமெனப் புகல் உண்மையும் வாழிய
அருமை வாழ்க அருட்செல்வம் வாழிய
அறுமை பக்கம் ஆட்சியில் வாழியே

2132 நன்மை வாழிய நற்பொருள் வாழிய
நாயமெங்கும் நலத்தவர் வாழிய
மென்மை வாழிய மெய்த்திரு வாழிய
விண்ணு மண்ணும் விருப்புற வாழியே

(கு-பு)

இந்நூல் சூர சங்காரப் பரணிஎன்னும் பெயர்த்து. முற்றுப்பெற்றது. இஃது கந்தபுராணக் கதையைப், பரணி முறையில் பாடப் பெற்ற தாகும். மொத்தம் கடவுள் வாழ்த்து முதல் வாழ்த்து முடிய பதினான்கு பகுதிகள் உள்ளன. மொத்தம் 2132 தாழிசைகள் உள்ளன.

இதன் கண் அமைந்துள்ள பகுதிகளின் பெயர்கள் வருமாறு :-

முதலாவது	கடவுள் வாழ்த்து
இரண்டாவது	கடை திறப்பு
மூன்றாவது	காடு பாடியது
நான்காவது	கோயில் பாடியது
ஐந்தாவது	தேவியைப் பாடியது
ஆறாவது	பேய்களைப் பாடியது
ஏழாவது	மாய்வினை
எட்டாவது	பேய் முறைப்பாடு
ஒன்பதாவது	திருவவதாரம்
பத்தாவது	காளிக்குக் கூளி கூறியது

பதினொன்றாவது	களம் காட்டல்
பன்னிரண்டாவது	கூடுமுதல்
பதின்மூன்றாவது	கூடிமுதல்
பதினான்காவது	வாழ்த்து
	என்பனவாகும்.

இதன் ஆசிரியர் நா. கனகராஜையர் என்பவராவார். ஊர்:- புதுக்கோட்டை; காலம்:- தற்காலம். இவர் இன்னும் இது போலும் அநேக நூல்களியற்றியுள்ளார்.

R. Nos. 7797-7798 (One Volume)

Paper: 33.8 × 21 cm. Pages 1-511

Lines 36 on a page. Tamil. Good. New. Extent 9,750 granthas.

R. No. 7797

சதாசிவப் பிரம்மேந்திர விஜயம்
SADĀ SIVA-P-PIRAMMĒNDIRA VIJAYAM

Pages : 1 - 344 Extent 6,500 granthas

Complete

An exposition of the life history of the brahmin sage Sadasiva Brahmendra of Madurai in 2000 verses, all by N. Kanagarajaier of Pudukkottai.

Beginning

ஸ்ரீ

1. சதாசிவ சரண பஞ்சகம்

காப்பு

மெய்த்தவத்தி னுற்ற விழுப்பயனாய் நான்மறையின்
தத்துவத்தைக் கண்ட சதாசிவந்தான் - சித்தமிசை
வைத்ததுதி சொற்றிடற்கு வாக்குநயந் தந்தருளும்
அத்திமுகத் தெந்தை யடி.

நூல்

1. அருளி னுருவா யமைந்த பொருள் அறிதற் கரிதென் றருமறைகள்
மருள வுரைத்த நிலைகலங்க மதியாற்றுருவி மகிதலத்தோர்
தெருள் வுணர்த்த வவதரித்த தெய்வக் குருவே செயற்கரிய
தருமம் தரித்த சதாசிவமே சரணம் சரணம் சரணமே

2. உலகின் வாழ்வோர் நினதுநிலை யுணரா ராகி மருளெனவே
கலக்க மிடுதல் கண்டிருந்தும் கமல விலையில் வருபுனல் போல்
நிலையில் பொருள்க ளிடையமர்ந்து நிலையாம் பொருளி னிலைத்திருந்த
தலைமையுடைய சதாசிவமே சரணம் சரணம் சரணமே.

வாழ்த்து

வாழி சதாசிவ மாமுனி பாதமலர்
வாழி யவர்தம் மவுனநெறி - வாழியரோ
ஐந்துகவி யால்நன் கவர்கழல்கள் போற்றிசெயும்
இந்தவொரு நூறு மினிது.

3. சதாசிவ மாலை (விம்சதி)

காப்பு

மும்மதத்து வேழ முகமுடைய மூர்த்தியருள்
செம்மைநெறி வாய்த்த செயலதனால் - இம்மைத்
தவமே பொறுத்த சதாசிவனார் மாலை
சிவமே மலியுஞ் செறிந்து

நூல்

1. சிவத்தையே யறுபா னான்கு திருவிளையாடல் செய்யப்
பவத்தையே பூண்டான் போன்று பண்டையோர் கண்டவூரில்
நவத்தையே விளக்க வந்த ஞானியாய்த் தோற்றங் கொண்டு
தவத்தையே தரித்துநின்ற சதாசிவ சரணம் போற்றி

2. மனக்குவாய்க் கெட்டா தோங்கும் மறைச்செழும் பொருளை யோர்ந்து
கனக்குல மாடமாமிக் கவினவே யிறைவன் செய்த

புனக்கடம் பிருந்த தெய்வப் புரத்தினிற் பிறப்புக் கொண்டு
தனக்கென வொன்று மில்லாச் சதாசிவ சரணம் போற்றி

20. கண்ணனை மனத்தின் வையார் கருணையங் கடலா மேக
வண்ணனைப் பவளச் செய்ய வண்ணனை யொருமை காணார்
மண்ணினை மண்ணுள் வாழும் வாழ்வினை மதிப்பரந்தோ
தண்ணனை மலர்ந்த வாய சதாசிவ சரணம் போற்றி

வாழ்த்து

இருபது விருத்தச் செய்யுள் இசைத்துமெய்த் துறவுபூண்ட
குருபா தெய்வ ஞான குணநிதி நெரூரிலுள்ள
தருவடி யடங்கி நின்ற சதாசிவ முனியைப் போற்றும்
பெருமையை யடைவோர் வாழ்க பிறங்குக வுலகமெல்லாம்.

5. சதாசிவப் பிரம்மேந்திர விஜயம்

ஸ்ரீ

பரம குருவே நம:

சதாசிவப் பிரம்மேந்திர விஜயம்

முதலாவது

சம்பவ காண்டம்

1. பாயிரம்

கடவுள் வாழ்த்து

விநாயகர்

1. மெய்ம்மை யுற்ற விழுத்தவம் பூணலால்
தம்மை யுற்ற சதாசிவம் மாமுனி
செம்மை பெற்ற திருச்சரி தஞ்சொல
மும்மை மாமத மூர்த்தியை நாடுவாம்

அவையடக்கம்

27. தவத்தின் மிக்க சதாசிவ மாமுனி
சிவத்தி னுற்ற திருச்சரி தஞ்சொல
பவத்தி னின்று பழமைப் பயனுகர்
அவத்தி னிற்கு மடிமை துணிந்ததே.

நூல்

2. ஆற்றுப்படலம்

40. சிவபரஞ்சுடர் சுந்தரச் செழியனாய்ச் செங்கோல்
தவமலிந்த நற்றமிழக மகிழ்வுறத் தாங்கும்
உவமை யின்றிய மதுரையம் பதியினுக் குயிராய்
நவமலிந்தவள் வையையாம் பெயர்புனை நங்கை

41. புதுமை விஞ்சிய நுரையொடுந் திரையொடும் புகுந்து
மதுப மிஞ்சிய வளநிரை வயலெலாம் வளர்த்து
விதுவ ணிந்த மெய்ப்பரம் பொருள் முடியினும் விழைந்து
வதுவை கொண்ட வங்கயற்கணி முடியினும் வருவள்

3. யோக காண்டம்

16. வரப்பிடைக் கிடந்த படலம்

693. தனிமையிலே நிலைத்தனர் தவத்தின் செல்வமே
அனிதர நிலைமையி லடைந்த யோகியார்
இனிமையை தமிழ்மொழி யியங்கு நாட்டிடைப்
பனிவெயில் அறிகலர் படர்த லாயினர்

694. திரிபுர சுந்தரி சிறக்குங் காஞ்சியில்
ஒருபகல் தோன்றுவர் உயர்வு மொப்புயில்
கருணையின் மலிகயற் கண்ணி யாலயத்
தொருபகல் காணுவர் ஒருமைச் செல்வரே.

End

4. பிரமானுபூதி காண்டம்

40. மகா சமாதிப் படலம்

1998. மொழிகள் பற்பல வாமேனும் முழுமை நல்லன்பு வெள்ளம்
மொழிகளின் றுணைமை யானே முறைமுறை யுலகிலோங்க
வழிகள்பற் பலவாமேனும் வருமுடி பொன்றே யென்ற
பழியறு மெய்ம்மைக் காட்சி பரவுக வுலக மெல்லாம்.

1999. வாழிய கடவுட் செல்வம் வாழிய அறங்க ளெல்லாம்
வாழிய அருளின் வெள்ளம் வாழிய மதங்க ளெல்லாம்

வாழிய வொருமை யுள்ளம் வாழிய வுயிர்க ளெல்லாம்
வாழிய அறிவர் வாழ்வு வாழிய வுலக மெல்லாம்

2000. வாழிய பக்தி மார்க்கம் வாழிய கரும மார்க்கம்
வாழிய ஞான மார்க்கம் வாழிய பிறிநன் மார்க்கம்
வாழிய புதுவை நாடு வாழிய தமிழின் செல்வம்
வாழிய முனிவர் சீர்த்தி வளர்வுற வுலகமெல்லாம்

Colophon

சுபம்

நானூறு செய்யுட்களால் முன்பு நிறைவேறியிருந்த சரித்திரத்திற் பல மாறுதல்கள் நேரிடச் சந்தர்ப்பம் வாய்த்ததால் விருஷ ஹூ கார்த்திகை மாதம் ௨௧ ஆம் நாள் வியாழக்கிழமை தொடங்கி ஷெ ஹூ மாசி மாதம் ௩௰ ஆம் நாள் வெள்ளிக்கிழமை நிறைவேறிய ஆயிரத்தெழு நூற்றுப் பதினேழு செய்யுட்களை மறுமுறை இப்புத்தகத் திற் பிரதி செய்ததில் சித்திரபானு வருஷம் வைகாசி மாதம் ௨௭ ஆம் நாள் மங்கள வாரம் சித்தயோகம் ரேவதி நக்ஷத்திரம் உள்ள நன்னாளில் பிற்பகல் மூன்று மணிக்குள் பிரதி செய்து நிறைவேறியது. நெரூரில் அரங்கேறிய பிறகு அரங்கேற்றச் செய்யுள் அமைய வேண்டும். அதுவும் சேர்ந்தே செய்யுள் இரண்டாயிரம் ஆகும். குருவார் திருவருள் பொங்கும் மங்களம் எங்கும் தங்குக. உலகெலாம் வாழ்க.

நா. கனகராஜன்
புதுக்கோட்டை
9-6-42

நெரூரில் அரங்கேறி நிறைவேறியது,
16-6-42 செவ்வாய் 2.30 - 10மணி

(கு-பு)

இந்நூல் சதாசிவப் பிரமேந்திர விஜயம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இந்நூலின் முன்னர் இதனோடு தொடர்புடைய நான்கு சிறு நூல்கள் உள்ளன. அவையாவன:- 1. சதாசிவ சரண பஞ்சகம், 2. சதாசிவ நாமாவளி, 3. சதாசிவ மாலை, 4. சதாசிவ முத்தகம் என்பன.

இச்சதாசிவ பிரம்மேந்திர விஜயம் என்னும் நூல் 1. சம்பவ காண்டம் 2. குரு சரண காண்டம் 3. யோக காண்டம் 4. பிரமானு பூதி காண்டம் என்னும் நான்கு காண்டங்களையும், அதனுளடங்கிய

நாற்பது படலங்களையும் கொண்டுள்ளது. இறுதியில் உள்ள வாழ்த்து என்னும் நாற்பத்தொன்றாம் படலம் வடமொழியாலியன்றதாகும். இந்நூலாசிரியர் முதனூலாசிரியரோடு மாறுபடும் இடங்களையெல்லாம் தொகுத்துத் "திருத்தங்கள்" என்னுந் தலைப்பில் இறுதியில் இணைத்துள்ளார்.

நூல் குறிப்பு

இஃது சதாசிவப்பிரம்மேந்திரர் என்ற மகானைப் பற்றிய வரலாறாகும். செய்யுள் நடையில் அமைந்தது. இப்பெரியார் மதுரை மாநகரில் சிறந்திருந்ததொரு மறையவர் குடியுள் தோன்றியவர். இவரது பெற்றோர் சோமசுந்தரனார், பார்வதி என்போராவர். இளமையிலேயே கல்வி கேள்விகளில் நிறைந்து விளங்கினார். பலருடன் வாதிட்டு பல அற்புதச் செயல்களைப் புரிந்தார். ஒருமையின் சிறப்பினைக்கூற பிரமத்தின் பெருமையை, வேதங்கள் கூறிய வண்ணம், உலகிற்கு உணர்த்தினார். புதுவையில் வாழ்ந்த தொண்டைமான் என்ற மன்னன், இன்னாரைக் குருவெனக் கொண்டு வணங்கிப் போற்றினான். நெரூர் என்ற ஊரில் இவர் சமாதியடைந்தார்.

சச்சிதானந்த நரசிங்கர் கோயில் செயம் புரிந்து போற்றி செப்பிய துதி இதற்கு முதனூலாம். சான்று - இந்நூற் செய்யுள் 1977 காண்க.

R. No. 7798

இலங்கைப் பரணி

ILAṆKAI-P-PARAṆI

Pages : 345–511 Extent 3250 granthas.

Begins on page 345 of the manuscript described under R. No. 7797.

Complete

A prabandha called Ilangaipparani, based on the story of Ramayana in 1500 couplets. Author, N. Kanagarajaier, a literary giant of the 20th century.

Beginning

முகவுரை

ஆரியமும் பைந்தமிழு மாகி யருள்பொழியும்
காரியனை மெய்ஞ்ஞானக் கண்ணனைச்- சூரிய
சோதி யொளிமழுங்கும் தூடபெருஞ் சோதியினை
ஓதி நினைக்கு முளம்

தமிழ் மொழியில் இயலும் பிரபந்த வகைகளுள் பரணி என்பது ஒன்றாகும். அந்தாதி கலம்பகம் தூது உலா முதலிய பிரபந்தங்கள் பல பல அமைந்திருக்கப் பரணிகள் மிகச்சிலவே இன்றளவும் இயன்றிருப்பதே இப்பிரபந்தவமைப்பின் அருமையை விளக்கும். தூது ஐந்து நாழிகையிலும் பலசந்த மாலை ஆறு நாழிகையிலும் பாடுவேன் என்று வீறு பேசிய காளமேகப்புலவர் பரணி ஒருநாளிலும் பார காவியம் ஓரிரு தினத்திலும் பாடி முடிப்பேன் என்று கூறியதாக ஒரு தனிச் செய்யுள் தெரிவிக்கும். பார காவியம் பாடி முடித்தற்கு அடுத்த சிறப்புள்ள பனுவற்பணி பரணி பாடுவதே என்பது இதனால் நன்கு விளங்கும்.

இராமநாதபுரத்தில் ஸர் பி.டி. ராஜன் தலைமையில் நிகழ்ந்த மதுரைத் தமிழ்ச் சங்க வருஷோத்ஸவத்திலும் இச்செய்யுட்கள் சில படிக்கப் பெற்றன. இங்ஙனம் முறையே புலவர் ஆதரவு நாடி வரும் இப்புதுச் செய்யுள் தமிழ் மகளுக்கு உவப்பான பணியாகித் தமிழ் மக்களுக்கு இன்பம் விளைக்கு மென்றே கருதப்பெ ,ம்.

முதலாவது

கடவுள் வாழ்த்து

திருமால்

1. உலகவுயிர் படைப்பவனை யுந்திமலர் மலர்விக்கும்
அலகிலுரு வுடையவன்ற னாயிரம்பேர் பராவுதுமே. (க)

2. ஆயிரஞ்செங் கரமுடையா னருமரபின் விளக்கமென
மாயிரும்பூ தலம்புரந்த வள்ளல்கழல் வாழ்கெனவே. (உ)

இரண்டாவது

கடை திறப்பு

37. பைந்தமிழ் போற்றிய சங்கம் வளர்ப்பது பண்பென வுளசெழியர்
செந்தமிழ் நாட்டினில் வாழ்வுறு மங்கையர் திண்கதவந்
திறமின்

38. பொன்னியின் மாண்புகழ் பேசி யுளமகிழ் புதுமைய புலமையுளீர்
சென்னியி னாட்டிடை மேவுறு மங்கையர் திண்கதவந் திறமின்

39. ஆரண மோதிய வேள்விகள் வேட்டு மறச்செயல் போற்றியும்வாழ்
சேரலர் பூழியர் நாட்டுள மங்கையர் திண்கதவுந் திறமின்.

பத்தாவது

திருவவதாரம்

427. பிறவியெனுஞ் சிறையறியான் பலபிறவி யெடுத்துயிர்கள்
பிறவித்துன்பம்
அறவருளும் பெருங்கருணை யுடையபிரா னவதார மறைவல்
கேண்மின்

பரத்துவம்

428. பாற்கடலி லரவணையிற் றிருமகளா ரடிவருடப் படைகொள்
மூர்த்தி
ஏற்புறவே வைகுந்தப் பெருநகரி லிருக்குமென விருக்கே
யோதும்.

End

பதின்மூன்றாவது

கூழறுதல்

1498. தெய்வத்தை முன்னிட்டு வாது புரிபவர்
சித்தக் கலக்க மொழிந்திடுக
மெய்வைத்த செந்நெறி யோர்ந்து தெளிபவர் மேன்மை
பொலிய விளங்குறுக.

1499. அகத்தினிற் பொங்கு மரக்க ரவுணரால் ஆகிய வெம்பகை
போயொழிக

சகத்தினி லெங்குமே யன்பெனுந் தெய்வதம் தாண்டக மாடுக
நன்குறவே.

1500. ஆயிரங் கோடி யுயிரி னினத்தினும் அங்கங்கு கோயில்
கொளும்பொருளின்
மாயிரும் பல்புகழ் ஞால முழுதும் வளர்ந்து பொலிந்து
விளங்குறவே.

Colophon :

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக
சுபானு ஸு மாசி மீ 21 தேதி இப்பிரதி எழுதி நிறைவேறியது.

4-3-44.
நா. கனகராஜன்

பழைய மாணவன்
தேவராயன் செட்டியார்
பாதிச் செலவு
அச்சிடத் தருவதாய்
வாக்களித்துளான்

மதுரைப் புத்தக வியாபாரி
வி.சு. சுவாமிநாதன்
அச்சுப் பொறுப்பேனும்
நூறு ரூபாய் அளவேனும்
உதவுவதாக வாக்களித்தார்.

நா. க.

(கு-பு)

இந்நூல் இலங்கைப்பரணி என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இஃது இராமாயணக் கதையைச் சுருக்கி, பரணி என்னும் பிரபந்த வகையாற் பாடப்பட்டதாகும். சிறந்த நூல். இஃது பரணிப் பிரபந்தத்திற்கு, இலக்கண வகையாற் சிறிது மாறுபடுமாயினும், அதற்குச் சாந்தியாகச் சில, ஆசிரியரால் முகவுரையிலேயே கூறப் பெற்றுள

இதன் கண் அடங்கியுள்ள பகுதிகள் வருமாறு:-

1. கடவுள் வாழ்த்து
2. கடைதிறப்பு
3. காடு பாடியது
4. கோயில் பாடியது
5. தேவியைப் பாடியது
6. பேய்களைப் பாடியது

7. பேய் விளையாட்டு
8. பேய் முறைப்பாடு
9. அரச மரபு
10. திருவவதாரம்
11. காளிக்குக் கூளி கூறியது
12. களங் காட்டல்
13. கூழடுதல்

இந்நூலின் தொடக்கத்தில், இந்நூற் சிறப்பு நோக்கி, அறிஞர் சிலரான் அளிக்கப்பெற்ற, சிறப்புப் பாயிரங்களும், சாத்துக் கவிகளும், கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நூலாசிரியர் நா. கனகராஜையர் என்பவராவர். ஊர்:- புதுக் கோட்டை, காலம்:- தற்காலம். இவர் இராமாயணத் திரிவேணி போன்ற அநேக வேறு நூல்களையும் இயற்றியுள்ளார். காண்க.

R. No. 7799

சங்கர விஜயம் - பாகம் ஒன்று
SAṆKARA VIJAYAM - Part I

Paper : 34·5 × 21·6 cm. Pages : 1—178

Lines 36 on a page. Tamil. Good. New. Extent 3,250 granthas.

Complete

A life sketch of Adi sankara in verses by N. Kanagarajaier.

Beginning

1. ஸ்ரீ திரிபுர சுந்தரி பஞ்சரத்னம்
காப்பு

திரிபுர சுந்தரிரா ஜேஸ்வரி தேவி
பரிபுர பாதம் பணிந்து புரிதுதிக்கு
வேழமுகம் பூண்ட விநாயகனா மூத்தபிள்ளை
வாழவரும் வாக்கருளும் வந்து.

1. அரியர னான்முகன் முத்தொழி லியற்றத் காற்றலை யருள்
பெருந்தலைவி
கரிகர மேவிய ரும்பறற் புனலாற் கவின்றிரு மஞ்சள முவப்பாய்
விரிவரு முளத்தேம் துதியையு முவந்து வேண்டிய வரமெலாம்
தருவாய்
திரிபுரை யழகி யிறைவருக் கிறைவி திருமலி புதுவைவாழ்
சிவையே

2. வேண்டலு மிலையே வெறுத்தலு மிலையே விமலை சாகம்பரி கவுரி
ஆண்டவ ளலையோ வருளுருவுடைய வன்னைநீ யல்லையோ
வமரீ
தாண்டவ முவப்பாள் தனிப்பெருந்துணைவீ தத்துவம் கடந்த
தத்துவமே
தேண்டுவம் வருவாய் இறைவருக் கிறைவி திருமலி புதுவைவாழ்
சிவையே

வாழ்த்து

வாழி யிறைவி மலர்ப்பூந் திருக்கழல்கள்
வாழி கழல்பணியு மாதவத்தார் - வாழி
புதுவைநகர் எல்லாப் பொருளும் பொலிந்து
விதுவணியும் தண்டலைகள் மிக்கு.

நா. க. 7-8-51

3. கூத்தனூர்க் கலைமகள் பஞ்சரத்னம்

காப்பு

கூத்தனூர் நாமகளார் கோயிற் குடமதிற் கண்
கூத்தமரும் வேழத்தைக் கும்பிட்டு - நாத்தழும்பக்
கூத்தன் புகழ்ந்தகலைக் கோமகட்குப் பஞ்சரத்னம்
யாத்தல் துணிந்தனன் யான்

நூல்

1. கூத்தனூர் வாழும் குலக்கொடியே யன்பர்நினைந்
தேத்துறவே வீற்றிருக்கும் ஏந்திழையே - கூத்தன்
கவிகொள்ளும் நின்செவியிற் காதலால் நாயேன்
கவிகொள்ளல் வேண்டும் கனிந்து.

வாழ்த்து

6. வாழிய கூத்தனூர் வாழிய நாமகள்தாள்
வாழிய நாமகளை வாழ்த்துமவர் - வாழியரோ
வேதமாய் ஞானமாய் வீடாய் விரிந்தவறிவு
ஓதுவார் நெஞ்சுள் உறைந்து.

5-8-51

கூத்தனூரிற் பாடியது

6. ஸ்ரீ சங்கர விஜயம்

முகவுரை

அருளுருவம் பூண்ட இறைவன் ஒருவன் உண்டு என்ற கருத்தே மாறி வரும், மக்கள் பெருகிவரும் இந்நாளிலே, இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்பு இவ்வுலகத்தே அவதரித்து உண்மையான தேவ ரகசியத்தை விளக்கி, மக்கள் இனத்தை உய்யக் கொண்ட ஸ்ரீ சங்கர. குருவரர் சரிதம் வடமொழியிலே பல காவியங்களால் உரைக்கப் பட்டதாயினும், தமிழ் மொழியில் வேறுவேறு உருவத்திலே வெளி வந்துள்ளதாயினும், ஆஸ்திக புத்தியை எளியவழியால் வளர்க்க உதவலாம் என்னும் நோக்கத்தால் இசையொடு பாடத்தக்க தமிழ்ப் பாட்டு உருவத்தில் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

இங்ஙனம் எத்தனையோ திருப்பணிகள் இத்துறையில் இயன்றிருந்தும் இந் நூல் தோன்றுவது வித்யாரண்யர் சித்விலாசர் சங்கர விஜயர்களை ஒட்டி ஆசிரியன் குருபக்தியை வெளியிட உபகாரப்படும் நோக்கத்தாலே ஆகும்,

குருபாத தூளி.

கடவுள் வாழ்த்து

விநாயகன்

1. திருமறை முடிவு காட்டச் செகத்திடைச் சிவனே வந்து
குருபர னெனவே வாழ்ந்த குறிப்பினை விளக்கும் வண்ணம்
ஒருபிர ணவமே மெய்ம்மை யுருவமா யுடைய வேழம்
அருளுற வுளத்தே நின்றெம் மறிவினை யியக்கு மாலே,

13. கலையெலாம் பணியைப் பூணக் களியு நல்லருளே பூண்டு
நிலைபெறு மொருமை காட்டும் நிருபம குரவன் காதை
புலையுறு நெஞ்சும் பொய்ம்மை பொருந்திய நாவுங் கொண்ட
கலைதெளி வில்லா நாயேன் கருத்தினு ளெழுவதாமே.

நூல்

ஆனந்தக் களிப்பு

1. ஆனந்த வாரிதி யன்றோ - பரம
ஆனந்த சின்மய அற்புத மூர்த்தி
தானந்த மில்லாத சக்தன் - குரு
சங்கர ரென்று தழைத்த சரிதம்.

2. சங்கர குரவர் சரிதம் - வேத
சத்து விளக்குந் தனிப்பெருஞ் சரிதம்
சங்கரன் அவதார சரிதம் - ஞான
சாகர மாகிய சத்திய சரிதம்.

3. உள்ள துரைக்கும் சரிதம் - உள்ளும்
உள்ள முருக்கும் ஒருபெருஞ் சரிதம்
வள்ளல் குருவரர் சரிதம் - உலகம்
வாழவே வந்த மறையவர் சரிதம்.

திருவவதாரம்

4. கயிலை மலையின் முடிமேல் - உள்ள
கர்த்தா அவனென்றும் காரண னென்றும்
மயிலை வெலுமுமா தேவி - வந்து
வாழ இடந்தரும் மாதேவ னென்றும்

5. உருவமே யுள்ளவ னென்றும் - அழகு
ஒழுகும் வடிவமே யுள்ளவ னென்றும்
அருவமே பூண்டவ னென்றும் - இன்னும்
அருவுரு வாகிய ஆண்டவ னென்றும்

1146. காபாலிக நெறியே - துணிபெனக் கண்ட மனமுடையான்
ஆபால விருத்தருமே - பணிந்துறும் - அன்புத் துறவி முன்னே

1147. கூப்பிய கையுடனே-நெருங்கிக்-குறையி ரந்தனனே
பாப்பியல் நெஞ்சுடையான்-துணிவொடு-பாதக மெண்ணி
நின்றே

End

1275. உள்ள தொருமைப் பரம்பொருள் ஒன்றென
ஓதிய வேதத்தின் உட்கருத்தை
வள்ள லிவனே விளக்குகின் றானென
மாதவ யோகி யருளினரே.

1276. சீடரும் ஏனைய சான்றவர் கூட்டமும்
செப்பிய மெய்ப்பொருள் நன்குணர்ந்தார்
மூடரு ஞான முதிர்ந்தவ ராயினர்
முத்தர் பெருமான் அருள்விழியால்

1278. காலம் கடந்த கடவுள் பெருமையைக்
காட்ட வுரியது வேத மென்றே
ஞாலம் வணங்கப் பிறந்த குருவார்
நன்கு விளக்கினர் பண்முறையால்

(கு-பு)

இந்நூல் சங்கர விஜயம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இஃது இந்நூலாசிரியர் தம் குருவராகிய ஸ்ரீ சங்கரருடைய வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கிக் கூறுவதாகும். இம்முதற் பாகத்தில், கீழ்வரும் பகுதிகள் அடங்கியுள்ளன:-

திருவவதாரம்
சிவகுரு மோக்ஷம்
உப நயனம் பிரமசரியம்
ஐயம் ஏற்றல்
முதலை வாயின் மீண்டு துறவு பூண்டது
சங்கரர் காலடியை நீங்கியது
கோவிந்த சரணம்
பதும பாதர் வருகை
மனீஷா பஞ்சகம்
பாஷியம் எழுதல்
திருக்கயிலை அடைதல்
இலிங்கம் பெறுதல்
வியாசர்வருகை
சங்கர மண்டன சம்வாதம்

அமருக விருத்தாந்தம்
நரசிம்ம கராவலம்ப ஸ்துதி
அஸ்தா மலக விருத்தாந்தம்
காபாலிகள் வருகை
பதும பாதர் விரைந்து வருதல்
சங்கரர் கோகர்ணம் சேர்தல்

இந்நூலின் தொடர்ச்சி அடுத்துள்ள எண்ணில் வருகிறது. காண்க. இதனாசிரியர் நா.கனகராஜையர் எம்.ஏ. ஆவார். ஊர்: புதுக்கோட்டை காலம்: தற்காலம். இயற்றிய வேறு நூல்கள்:- ஆஞ்சநேய புராணம் முதலியன.

R. Nos/ 7800-7801 (One Volume)

Paper : 34·3 × 21·3 c.m. Pages : 1-182

Lines 36 on a page. Tamil. Good. New. Extent 3,000 granthas.

R. No. 7800

சங்கர விஜயம் - பாகம் இரண்டு
SAṆKARA VIJAYAM - Part II

Pages : 1-131 Extent 2300 granthas

Complete

Continuous work of the piece described above. Here, we have upto the complete number 2500 from 1279.

Date of this volume is 1955.

Beginning

ஹரிஹர க்ஷேத்ரம் அடைதல்

1279. அரியென அரனெனக் கடலில் மலையிலே
ஆண்டவன் வாழ்ந்த நிலை மறந்தே
அரியர னாகி யொருமை விளக்கும்
அரியர நற்பதி யெய்தினரே

1280. மச்சம் வராகமே கூர்மம் நரசிங்கம்
வாமனன் பரசு ராமனென
உச்ச இராமன் பலராமன் கண்ணனாய்
ஓங்கிய புத்தனே கற்கியென

1281. தன்னை விளக்கிய தத்துவ மூர்த்தியே
சங்கர னாயினன் காண்மி னென
மின்னொளிர் வேணியன் விண்டுவென நின்ற
மேன்மை விளக்கினர் பாடினரே

தாயின் அந்தியக் கிரியை
வேறு

1599. சிறந்த வன்னையார் உடல்நிலை சிதைந்தது தெளிந்தார்
யறந்து வந்தனர் மதலையார் வானிடைப் படர்ந்தே

1600. அன்னை யன்னை யென்னன்னையே யடியனே னடைந்தேன்
என்னை வேண்டுவதென்றனர் விதிகளுக் கிறைவர்

End

2498. எதனை நினைந்தா லியலாதே
எதனை வளர்த்தால் வளராதே
இதனை நினைந்தா யிதுபுரிந்தாய்
எனவே நினையார் புனைபவரே

2499. வாழி சிவமே பரங்கருணை
வள்ளால் உலக முய்யவரும்
வாழி கதையும் வாழியரோ
வாழி யுலகு வாழ்வுறவே

2500. சத்தாய்ச் சித்தாய் ஆனந்தம்
தானாம் பொருளை மனமாரத்
தத்தாத் திரேயர் புகழ்ந்துமனச்
சாந்தி பொருந்தி யமர்ந்தனரே.

வாழ்த்து

வாழிய சங்கர மாதவர்
மான்மியம் மாநிலத்தே
வாழிய சங்கர நாமம்
உரைப்பவர் வாழ்வினிலே

Colophon

இரண்டாம் பிரதி கர மார்கழி உக புதன்கிழமை காலை 5 மணி பூர்த்தி.

மூன்றாம் பிரதி 1-2-55 பூர்த்தியாகியது. நா. கனகராஜன், காலை 5-30 மணி சய, தை, சக செவ்வாய்.

(கு-பு)

இந்நூல் சங்கர விஜயம்-பாகம் இரண்டு என்னும் பெயர்த்து. மூற்றுப் பெற்றது. இஃது முன்னூலின் தொடர்ச்சியே ஆகும். இதன் கண்,

ஹரிஹர க்ஷேத்ரம் அடைதல்
சுரேசுரர் கருத்தும் பிறர் கருத்தும்
பதும பாதர் மறுமொழி
தாயின் அந்தியக் கிரியை
குருதேவர் வாத யாத்திரை
பதுமபாதர் மனக்குறை கூறுதல்
சீடர் மன வருத்தம்
பதுமபாதர் மந்திர உச்சாரணம்
மகா நதிக் கரைக்கு வருதல்
துவாரகை அடைதல்
பிரயாகை வருதல்
கவுட பாதர் வருகை
உத்தர யாத்திரை
சுவாலாமுகி தரிசனம்
சங்கரர் புறப்படுதல்

என்னும் பகுதிகள் அடங்கியுள்ளன. இந்நூல் சங்கரரின் பெருமை நன்கு விளக்கமுறுகிறது. இதன் ஆசிரியர், நா. கனகராஜையர் என்பவராவர். காண்க.

R. No. 7801

சங்கர குரவன் ஆற்றுப்படை
SAṆKARA KURAVAN ĀṞṞUPPAḌAI

Pages : 133-170 Extent 700 granthas

Begins on page 133 of the manuscript described under R. No. 7800.

Complete

In the style of Arruppadai prabhandam, this is on the life of Adi Sankara in verses by N. Kanagarajaier. This literature contains as much as 797 lines.

Beginning

காப்பு

சுத்தசிவ மெய்ப் பொருளே தோற்ற முற்றுக் காலடியில்
அத்துவித மெய்ப்பொருளை அன்பருளால்-உய்த்துணர்த்தும்
ஆற்றுணுழை யன்பர்தமக் காற்றுப்படை யமைக்க
ஆற்றல்தரும் வேழமுகத் தான்.

நூல்

உலக மனைத்தும் உண்மைநன் குணர
அலகில் நாமகள் அலைமகள் மலைமகள்
முக்கணன் நான்முகன் முராரியா யமைந்த
பொக்கமில் மும்மையிற் பொலியு மொருபொருள்
ஆண்மை பெண்மையாம் கோண்மை கடந்தது
கேண்மை நெறியாற் கிடைக்கப் பெறுவது
கல்வி கேள்வி கதுவ லியலாச்
செல்வ மாகிய சிறப்புத வருளது
வன்மை துணையா மருவு லியலா
நன்மை யனைத்தும் நல்குதல் வல்லது
சொல்லின் துணையாற் றுருவுத லரிய
எல்லின் விஞ்சிய இருக்கையி னிருப்பது

சால்புடை முனிவரர் தம்முளம் நிலைப்பது
கால்கர மில்லது கண்கா தில்லது
ஆயிரம் கண்ணின தாயிரம் செவியது
ஆயிரம் முடியது ஆயிரம் அடியது
என்னொடு வருக இருப்பதை நோக்குவோம்
எனவே யழைத்தன னேகி முன்னவன்
பாம்பென மருண்டு பதறி யோடிய
பழுதையைத் தடியாற் பலமுறை புரட்டி
விளக்கி னொளியில் வெளிப்படக் காட்டிக்
கையா லெடுத்தும் ஐயா நீயும்
உணர்க வென்னவே யுணர்த்திய பிறகு
பாம்பிலை பழுதையே பார்த்த பொருளென
உணருவன் தளர்ச்சி ஒழிகுவன் அன்றே

ஸ்ரீ

சங்கர குருவரர் ஆற்றுப்படை

காப்பு

சுத்தசிவ மெய்ப்பொருளே தோற்றமுற்றுக் காலடியில்
அத்துவித மெய்ப்பொருளை அன்பருளால்-உய்த்துணர்த்தும்
ஆற்றுணுழை யன்பர்தமக் காற்றுப்படை யிசைக்க
ஆற்றல்தரும் வேழமுகத் தான்

நூல்

உலக மனைத்தும் ஒருபே ருண்மை
அலகறு மறைகளின் அருங்கருத் துணர்வான்
கலைமகள் அலைமகள் மலைமகள் எனவும்
மலைமுடி யுறைபவன் அலைமிசை வளர்பவன்

5. மலர்மேல் மலர்தரு மறையவன் எனவும்
ஆண்மை பெண்மையாம் கோண்மை யுளதுபோல்
கேண்மை விழைகுநர் கிடைப்புற விளங்கும்
மும்மைத் தன்மை முறைமையி னுளதுபோல்
செம்மை கருமை வெண்மை யுளதுபோல்

10. விளக்க முறுவது விளங்க லரியது
துளக்கம் இல்லது தோன்று லில்லது
கல்வி கேள்வியாற் கதுவலு மியலாச்
செல்வ மெனும்பெருஞ் சிற்றபருள் செய்வது
வன்மை துணையா மருவுத லரியது

390. ஆரிய மூர்த்தியை ஆரண மூர்த்தியை
துறவே யழுத்த அறவுரு மூர்த்தியை
பிறவறம் விளக்கப் பிறப்புறு மூர்த்தியை
உண்மை யறிவுரு ஓமெனும் பொருளென
இன்ப மயவுரு எங்குமுள் ளதுவென

End

785. எழுந்த பேரொளியே தொழுந்தகு குருவரன்
அருள்மழை பொழியும் இருவிழி மலரினன்
அஞ்சலை வருகென அழைக்கும் குறிப்பினன்
அன்பினர் பணிதரும் நன்புறு கழலினன்
வன்பினர் நெருங்கி மடங்கும் செயலினன்
துன்பினர் துன்பம் தொலைக்கும் துணிபினன்
இன்பினர் உளம்பே ரின்பவா ழியிடைத்
திளைக்க அவருளம் வளைக்கும் சூழ்ச்சியன்
எய்துக அணுகுக பொய்தவிர் பெருநிலை
அடைக வாழ்க அறிவாய் அடையும்
நலமெலா முறுக ஞானிகள் வணங்கும்
அங்கண னொருமை அவதார மாகிய
சங்கர நாம தவமுனி கழலிலே.

வாழ்க ஒருமை மறைமேற் பொருடானே
வாழ்க ஒருமை வழங்கியருள் - சூழ்வுடைய
சங்கர மாதவர் தாண்மலரும் அன்னதனை
மங்களமா நாடு மனத்து.

Colophon

நா. கனகராஜன்
மூன்றாம் பிரதி. ஜய. தை. பௌர்ணமி
மதுரை தெப்பத் திருநாள் பிற்பகல் ஞாயிறு 2·30 மணி

(கு-பு)

இந்நூல் சங்கர குரவன் ஆற்றுப்படை என்னும் பெயர்த்து. முற்றுப்பெற்றது. இஃது "ஆற்றுப்படை", என்னும் பிரபந்த வகை யான் சங்கரருடைய கொள்கைகளையும், அவர்க்கு வாழ்நாளில் ஏற்பட்ட சிறப்புக்களையும் பற்றிக் கூறுகிறது. இதன் கண் இந் நூலின் இரண்டு பிரதிகள் சிறிதளவு வேறுபட்ட நிலையில் காணப் படுகின்றன. இரண்டாம் பிரதியே நன்கு அமைந்துளது.

இதன் ஆசிரியர் நா. கனகராஜையர் என்பவர். இவர் தம் ஆசிரியரின் சிறப்புக்களை விளக்குமுகத்தான் இந்நூலினைப் பாடி யுள்ளார்.

இந்நூலின் இறுதியில், 171-182ஆம் பக்கங்களில் (R. No. 7803) 'திருவேங்கடமுடையான் துதி மஞ்சரி,' என்னும் நூலின் தொடர்ச்சி அடங்கியுள்ளது.

R. Nos. 7802-7803 (One Volume)

Paper: 32·9 × 21 cm. Pages 1-140

Lines 42 on a page. Tamil. Good. New. Extent 4,250 granthas.

R. No. 7802

புவனேசுவரி அந்தாதி - (உரையுடன்)
BHUVANESUVARI ANTĀDI - (With commentary)

Pages : 1 - 123 Extent 3,250 granthas

Complete

All these 108 verses are on Bhuvaneswari, goddess, of Pudukkottai, conspicous is the fact that the author, N. Kanagarajaier, has himself written the commentary.

Beginning

முகவுரை

அளவுக் கடங்காத ஆற்றல் உருவைக்
கிளவித் தொகையாற் கிளத்தும் - வளவறிவர்
தாண்மலரைப் போற்றித் தமிழ்மகட்குச் சாத்துகின்ற
நாண்மலரிஃ தோங்கும் நலம்

உண்மைப் பொருள் ஒன்றே. அஃது இரண்டாவதில்லை. பன்மைப் படும் சிறுமையும், அதற்கு இல்லை. ஆயினும் உலக மக்கள் அறிவு பதம்படும் நிலையிலே ஒருமையே பன்மையாக உணரப்பட்டு, ஆராய்ச்சி யின் மேல், ஒருமைத் தெளிவு பிறக்கின்றது. அவ்வொரு பொருள் ஆண் பெண் அலி என்ற மும்மைக்கு அப்பாற்பட்ட ஒருமைச் சிறப்புளது.

சங்கரர், காளிதாசர், கம்பர், அபிராமிபட்டர் முதலிய பெருமக்கள் காட்டிய வழி பற்றி இவ்வந்தாதி அன்புக் காணிக்கையாக அம்பிகை யின் திருவடியில் வைக்கும் பொருட்டு இயற்றப்பட்டுளது. இதனை உலகம் காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து இறைவியருளை வாழ்த்திச் சுவைத்தும் சுவைப்பித்தும் இன்புறுவதாகுக.

18-6-58 ஆசிரியன்
மதுரை

ஸ்ரீ
ஸ்ரீ புவனேசுவரி அந்தாதி

காப்பு

புதுவை யதிட்டானம் போந்தபுவ னேகி
மதுவை வழங்கும் மலர்த்தாள் - கதுவவரும்
அந்தாதி செவ்வே யமைய வருள்பொழியும்
கந்தாதி போற்றும் கயம்

உரை

புதுக்கோட்டை நகரில் உள்ள சதாசிவப் பிரம்மேந்திர சுவாமிகள் அதிஷ்டானத்திலே ஓவியவுருவத்தில் கோயில் கொள்ள உவந்து வந்திருக்கும் புவனேசுவரி தேவியின் மதுவை அருளும் மலர்ப் பாதங் களைப் பற்றவரும் இவ்வந்தாதி நன்கு அமையும் வண்ணம், கந்தன் முதலிய தேவர் போற்றும் கயமுகக் கடவுள் நன்கு அருள் பொழிவான்.

விளக்கவுரை

புதுவை - தொண்டைமான் புதுக்கோட்டை என்ற பெயர் புனைந்த தருமபூமி. அதிட்டானம் - அந்நகரத்தின் கீழைக் கோடியில் இருக்கும் சதாசிவப் பிரம்மேந்திர அதிஷ்டானம். . . . .

. . . .

. . . .

இறைவி வழிபாட்டுக்கு மார்க்க தர்சியான சங்கரர் விநாயகனை முன் நிறுத்தித் தேவியைச் சாந்தப்படுத்திய ஐதிஹ்யம் இன்றும் வழங்குகின்றது. புவனேசுவரி திருவருள் பூரணமாக வாய்க்க இக் காப்பு உறுதுணையாயிற்று.

நூல்

1. திருவே யருளே கலையே விளங்கிய தெய்வதமே
உருவே யிஃதொன் றுணர்தற்கரிய வுயர்வுடையாய்
கருவே புகுதா தடியரை யாண்டருள் கான்மலராய்
பொருவே யரிய புதுவைப் புவனேசி போந்தருளே.

உரை

திரு அருள் கலை என்ற மூன்று குணங்கள் விளங்கிய தெய்வமே. இன்னதுதான் உருவம் என்று உள்ளத்தால் உணர்தற்கு அரிய உயர்வுடையாய். கருக்குழியிற் புகாவண்ணம் அன்பரை ஆட்சி கொண்டருளும் திருவடி மலர்களையுடையாய். ஒப்பான ஒரு பொருள் எங்கும் இல்லாத புதுக்கோட்டைப் புவனேசுவரியே நீ எம் இதய மலரிற் புகுந்து விளங்கி அருள்புரிவாயாக.

(வி-ரை)

திரு என்பது கண்டவர் மனம் கவரும் நோக்கம். ஸ்ரீ என்ற வடசொல்லுக்கு உள்ள பொருள் எல்லாம் இச்சொற்கும் உண்டு. அருள் என்பது காரணம் ஒன்றும் இல்லாமலே பிறர்பால் உண்டாகும். மன நெகிழ்ச்சி.

. . . .

. . . .

இவர்கள் தமக்கு வேண்டுவன இரக்கவும் அறியாதிருப்பது கண்டே வேத மாதா சமகத்தில் அவர் கேட்கத்தக்க எல்லாச் செல்வங்களை' யும், அமைத்திருக்கின்றாள். இம்மொழி மூன்றும் அக்கருத்தை விளக்க நின்றன என்று உணர வேண்டும்.

2. அருளைப் பொழிதரு நேத்திரங் கொண்டரு ளாரணங்கே
மருளைத் தகர்த்தெறி பாதாம்புயமுள மாதரசீ
பொருளைத் துருவுநர் நெஞ்சேறி நின்ற புவனவல்லி
இருளைப் பொருகுழற் காரிகை பைந்தமி ழேற்றனையே.

உரை

திருவருள் வெள்ளம் பொழியும் விழியினை கொண்ட தெய்வமே இயல்பாக மனித வருக்கத்தின் மனத்தே எழும் மருளைத் தகர்த்து எறியும் பாத கமலங்களையுடைய மாதரசி, பரம்பொருள் எது என்று மனத்தால் நாடுகின்றவர் அகத்தே ஏறி நின்ற புவனேசுவரி, இருள் போன்ற குழலையுடைய அழகுருவமே, ஆரியத்தால் அன்பர் உரைத்த துதிகளை யேற்று அருள் புரிந்தது போலவே பைந்தமிழால் இயன்ற துதிகளையும் உவப்போடு ஏற்றருளினாய் .

(வி-ரை):- தேவியின் திருநேத்திரம் எப்பொழுதும் அன்பர் நலத்தையே நோக்கியிருக்கும் திருவுள்ளக் குறிப்பை விளக்குவ தாதலால் அடையத் தெரியாத அன்பரையும் அருகே அழைக்கும் வண்ணம் அருள் வெள்ளத்தைப் பொழிந்து கொண்டேயிருக்கும். ஆரணங்கு அறிவுக்கு அரிய தெய்வம். தேவியின் திருவிழி அருள்வெள்ளம் பொழிவ்தற்கேற்ப அவள் பாத தாமரை அன்பர் மனத்திலே ஜிவஸ்வ பாவத்தால் எழுந்து வளர்ந்து அவர் நல்வாழ்வைக் கெடுக்கக் காத்திருக்கும், மருட் பகையை ஒழித்து அருளி உதவுகின்றது.

... ...
... ...
வங்கத்திற் பிறந்த கவி வங்கமொழியிற் பாடினால் ஏற்க வேண்டும். தெலுங்கர்க்குத் தெலுங்கு, தமிழர்க்குத் தமிழ் இயல் மொழிகளே. குழவி மழலை தாய்க்கு விளங்கும்.

End

107 அலைப்பால் வளருந் திருமாலும் தாமரை யால யத்கே
முலைப்பால் இலாதே வளர்ந்த குழவியு முக்கண்ணனும்
கலைப்பால் விளங்காக கருத்தை யளியேம் கருத்துரை
நிலைப்பால் விளங்கும் குருவர ராகுதல் நின்னருளே.

உரை

திருப்பாற் கடலில் பள்ளிகொண்ட திருமாலும், தாமரைக் கோயிலிலே முலைப்பால் பருகாது வளர்ந்த குழவியான நான்முகனும் முக்கட் பெருமானும் சாத்திரங்களால் விளங்காத கருத்தை அளியெங்கள் உள்ளத்தால் உணரும்படி நிலையான இடத்தை விளக்கும் குருவரராக வருதல் இறைவி உன் திருவருள் வயத்ததே ஆகும்.

(வி-ரை):- அலையும் கடலும் அபேதமாகக் கருதப்படுதலால் கடலை அலை என்றே கூறும் வழக்கம் எழுந்தது. 'அலையுருவக் கடலுருவத்தாண்டகை' என்று கம்பரும் பாடுகின்றார். திருமால் வளரும் அலை - திருப்பாற்கடல்; தாமரை ஆலயம், திருமால் உந்தியினின்று எழுந்து பிரமதேவன் பிறந்து வளர இடந்தந்த கமல மலர்: பிரமன் அங்கே பிறந்து வளர்ந்த சிறப்பால் முலைப்பால் பருகாது வளர்ந்த குழவி ஆனான்.

... ...
... ...

இங்ஙனம் திவ்ய ஞானம் பெற்ற மகாத்மா, இராமகிருஷ்ண பரம ஹம்ஸர் என்ற உண்மையை உலகம் உணர்ந்து உண்மை தெளியும்.

108 நின்னருள் வேண்டுநர் நூற்றெட்டு நாமம் நிகழ்த்துகின்றார்
பன்னிரு கையினன் நாமகள் தந்த பழந் தமிழால்
முன்னொரு பேரும் உருவும் பொருந்தா முறைமையினுக்கு
என்னரு மெய்ப்பணி நூற்றெட் டிசைத்தனன் ஏர்திருவே

உரை

அழகிய திருவுருவம் உடைய புவனேசுவரியே உன் திருவருளை வேண்டுகின்ற அன்பர் உனக்கமைந்த நூற்றெட்டு நாமங்களையும் நாவாற் சொல்லி நினைத்த பயன் பெறுகின்றார். பன்னிருகைகளையுடைய முருகப் பெருமானும் நாமகளும் அருளிய பழமை மிக்க தமிழ் மொழியால் முன் ஒரு நாமமும் உருவமும் பொருந்தாத முறைமையுடைய உனக்கு என் அரிய மெய்ப்பணி நூற்றெட்டுச் செய்யுளும் அந்தாதி ஆக்கி இசைத்தேன். ஏற்றுக் கொண்டருள்க.

(வி-ரை)

தேவி திருவருள் பெற நாமாவளி பெரிதும் உதவும். தேவி நாமாவளி மூன்று வகையாக உள்ளது. ஆயிரத்தெட்டு நாமம் உள்ளது ஒன்று. முந்நூற்றுப் பெயர் நாமாவளி ஒன்று உண்டு. லலிதா ஸஹஸ்ர நாமம் லலிதாத்ரி சதி லலிதா அஷ்டோத்ரம் என்ற மூன்றும் இவ்வழியிற் பிரசித்தி பெற்றன. முன்னிரண்டும் சிறந்த பாஷ்யம் பெற்று விளங்குகின்றன. இந்நாமாவளிகளைத் தவிர தேவி ஸஹஸ்ர நாமம் வேறு உண்டு.

... ...

... ...

அகங்கார மமகாரம் ஒடுங்கவேண்டும் என்று வேண்டும் பிரபந்தத்தை அகங்கார மமகாரம் தோன்ற என்பணி என்று கூறவில்லை. ஜனக மன்னன் 'மமசுதர்' என்றாற் போல இப்பிரபந்தத்தில் எனது என்ற பற்று எழுந்ததும் இறைவி செயல்.

பயன்

போற்றத் தகுந்த புவனேசி பாதம் புனையவலார்
சாற்றத் தகுந்த கலைச்செல்வ மெய்தித் தழைப்பதன்றி
ஏற்றத் திருத்தும் பொருட்செல்வ மோங்கி இடைபொருந்தி
மாற்றத் தடங்காப் பெருவாழ்வு மெய்தி மகிழ்வதுண்டே.

உரை

போற்றத் தகுந்த புவனேசுவரி தேவியின் திருவடிகளைப் புனைய வல்ல புலவர் உலகம் புகழத்தகுந்த கலைச் செல்வம் அடைந்து தழைப்பது மாத்திரமே அன்றி உலகத்தில் உயர்ந்த நிலையிலே நிறுத்தும் பொருட் செல்வம் ஓங்கிப் புகழ் பொருந்திச் சொல்லுக்கு அடங்காத பெருவாழ்வும் அடைந்து மகிழ்வதும் உண்டு.

(வி-ரை)

போற்றத் தகுந்த என்ற அடைமொழி புவனேசுவரிக்கும் அவள் திருவடிக்கும் பொருந்தும். கலைச் செல்வம் உலகத்தில் ஒருவர்க்கு வாய்க்குமெனின் இவர் இச்செல்வம் பெற்றவர் என்று பலராற் புகழப் பெறுதலால் சாற்றத் தகுந்த கலைச்செல்வம் எனப்பட்டது.

. . . .
. . . .

யதோ வரசோ நிவர்த்தத்தே அப்ராப்ய மனஸா ஸஹ என்பது இங்கு உரைக்கப்பட்ட கருத்தாம்.

செய்யுள் அகராதி
அருஞ்சொல் அகராதி

(கு-பு)

இந்நூல் புவனேசுவரி சதகம் - உரையுடன் என்னும் பெயர்த்து. *முற்றுப் பெற்றது.* இஃது புதுக்கோட்டை நகரத்தின் கண் உள்ள *சதாசிவப் பிரம்மேந்திர சுவாமிகள் அதிஷ்டானத்திலே ஓவியவுருவத்* திற் கோயில் கொண்டுள்ள புவ்னேசுவரி தேவியின் மேல், '*அந்தாதி*' வகையாற் *பாடப்* பட்டதொரு தோத்திரப் பிரந்தமாகும். மொத்தம் *நூற்றெட்டுச் செய்யுட்கள் உள்ளன.* இதன் கண் தேவியின் *சிறப்புக்கள் அனைத்தும்* தொகுத்துக் கூறப்பட்டுள. தேவியைப் பற்றிய தமிழ் வடமொழி *நூல்களின் கருத்துக்கள்* பெரும்பான்மையும் இதன்கண் அடக்கப்பட்டுள.

செய்யுட்கள் ஒவ்வொன்றுக்கும், பொழிப்புரையும், விளக்கவுரையும் கொடுக்கப்பட்டுளது. மிகவும் *சிறந்த* நூலாகுமிது. இதனால் நூலா சிரியரின் கடவுட் பக்தியும், புலமைத் திறமும் வெளியாம்.

ஆசிரியர்:- நா. கனகராஜையர் எம். ஏ., ஊர்:- புதுக்கோட்டை காலம்:- தற்காலம்; இயற்றிய வேறு நூல்கள்:- ஆஞ்சநேயபுராணம், இராமாயணத் திரிவேணி முதலியனவாம்.

R. No. 7803

திருவேங்கடமுடையான் துதி மஞ்சரி
TIRUVEṆKAṬAMUḌAIYĀN TUDI MAṆCARI

Pages : 125-140, 171-182, 455-477 Extent 1000 granthas.

Begins on page 125 of the manuscript described under R. No. 7802 & 171 of the manuscript described uder R. No. 7800. & 455 of the manuscript described under R. No. 7786.

Complete

Author, N. Kanagarajaier on his sick bed invokes god Thiruvenkata mudaiyan for his grace in 6 minor literatures like 'sindhu' etc., in the year 1962 at Madura

Beginning

1. திருப்பள்ளியெழுச்சி

1. மூலமே நடுநிலை முடிவென விளங்கும்
முதல்வனே கருணையின் மூர்த்தியே நெடியோய்
காலமே இடமெனும் கணக்கெலாம் கடந்த
கருப்பொருளே யடியார் மனத்தொளியே
சீலமே சிறந்தவர் செழுந்தமிழ் மொழியால்
திருவுறப் புகழ்ந்தவை செவியடைத் தருள்வாய்
ஆலமேல் மிதந்தருள் வேங்கடத் தரசே
அருட்பெருங் கடல் பள்ளி யெழுந்தருளாயே.

2. பெருமையே யுருவமாப் பிறங்கிய பெரும
பேச்சின தெல்லையிற் பிரிந்தெழு முருவ
கருமையே யுருவமாக் கனிவுற வமைந்தாய்
கரத்திலே சிலையெடுத் தரக்கரைச் செகுத்தாய்
ஒருமையே பொருளென வுரைப்பவர் மனத்தே
ஓமென விளங்கிய வொருபெரும் பொருளே
அருமையே யறிகிலா வேங்கடத் தரசே
அருட்பெருங் கடல்பள்ளி யெழுந்தருளாயே

10. கூவின கோழிகள் குருவிகள் ஒலித்த
குழுமிய காகங்கள் குலவின கரைந்த
தேவிய ரிருவரும் திருவடி வருடித்
தேவனே யருள்கெனச் செப்பின ரிருந்தார்

பாவியர் புண்ணியர் பரிணதா சிறுவர்
பரவச முறச்சிரம் பணிந்தனர் சூழ்ந்தா
ஆவியே அமுதனே வேங்கடத் தரசே
அருட்பெருங் கடல்பள்ளி யெழுந்தருளாயே.

3. திருவேங்கட நாயகன் விண்ணப்பக் கலிவெண்பா

1. ஓங்காரத் துள்ளே யுறுபொருளாய் நிற்கின்ற
ஆங்காரத் தப்பாலாம் ஆண்டவனே - நீங்கா
மெய்யன்பர் ஓதிநிற்கும் வேதத் துருவாகிப்
பொய்யன்பு மாற்றும் புராதனனே - செய்யென
செப்பிய செய்கையெலாம் செய்யாதேம் பூசனையும்
ஒப்பிய வேங்கடத்தின் ஒப்பிலியே - தப்பி
தப்பெல்லாம் நோன்று தயையே பொழிந்தருளும்
ஒப்பில்லா வெற்பி னொருவனே - இப்பொல்லாப்
5. பாழ்ம்பிறவி வீழ்ந்து பதறிக் கதறுகின்றேம்
காழ்ப்பொருமல் கேட்கும் கடவுளே - யாழ்ம் புதுமை
செய்து பொருளீட்டித் தேவநின் னாலயத்தை
எய்து பெரும்பேறே இச்சிப்பர் - வெய்து

105. வருத்தும் வினையை மதியார் மனத்தைத்
திருத்தும் நெறியே சிறப்பார் - பொருத்தும்
மொழிகளா னின்றன் முழுப்புகழே யோதும்
வழிகளா லோங்கி மகிழ்வார் - பழிகளால்
ஏதமுறா வாழ்வே எமக்கருளி யெப்பொழுதும்
பேதமுறா வன்பர் பெருங்குழுவிற் - போதமுறச்
சேரப் புரிவாய் திருவேங்கட வென்பர்
ஆரப் புரிவாய் அருள்

5. திருவேங்கடவன் வருகைச் சிந்து

சுருதிப் பொருளே வருக
துணிபின் துணிபே வருக
திருதிப் பொருளே வருக
திருவேங் கடவா வருக

2. கூறற் கரியாய் வருக
குலவற் கெளியாய் வருக
தேறற் குரியாய் வருக
திருவேங் கடவா வருக

3. எண்ணம் தருவாய் வருக
எளிமை புரிவாய் வருக
திண்ணம் தருவாய் வருக
திருவேங் கடவா வருக

4. பெருமை யுருவே வருக
பிறவா தவனே வருக
திருவை யுடையாய் வருக
திருவேங் கடவா வருக

தொடர்ச்சி (R. No. 7801)

78. ஆள் (ணா) நாடு அறியாய் வருக
அரசுக் கரசே வருக
சேணா டுடையாய் வருக
திருவேங் கடவா வருக

79. பாடற் கரியாய் வருக
பணிவார்க் கெளியாய் வருக
சேடப் படையாய் வருக
திருவேங் கடவா வருக

80. வாயாய் மனத்தாய் வருக
மறையாய் மறைவாய் வருக
சேயாய் அணியாய் வருக
திருவேங் கடவா வருக

குறிப்பு

புவனேசுவரி அந்தாதி கையெழுத்துப் பிரதியின் இறுதிப் பக்கத்தில் உள்ள குறிப்பின் தொடர்ச்சி திருநெல்வேலிச் சீமையில் உள்ள அரங்க சமுத்திரம் என்ற கிராமத்தில் இராமாயணப் பிரவசனம் செய்யவேண்டும் என்று போய் அங்குள்ள இரண்டு ஆறுகளிலும்

நீராடிப் பயின்றதில் தாமிரபருணியைக் கடந்து இரண்டு மூன்று நாள் திருப்புடைமூர்க் கோயிலில் அருளுருவமாக அமர்ந்திருக்கும் புடார்ஜுனேசுவரனைப் பணிந்து வந்ததன் பயனாக அவன் அருள் சுரப்பது உறுதி என்ற மனத்துணிவு ஒருபால் இழுக்கச் சேற்றுநீரிலும் ஆழ நீரிலும் நடந்த களைப்பால் வலக்கால் வீங்கி மிக்க துன்பம் விளைத்தது கண்டு மதுரைக்கு வந்து நாற்பது நாட்களுக்கு மேல் நோய்க்கிடக்கை கிடந்து, அத்துயரம் போக்க வேண்டியும் கனவிற் காட்சி தந்து அருள வேண்டியும், வேங்கடேசனை வேண்டிப் பாடிய சிறு பிரபந்தங்களுள் ஐந்தாவது இது. தொடக்கம் 23-6.62 பூர்த்தி 27-6-62 இப்பிரபந்தத் தொடர்ச்சி ஆஞ்சநேய புராணம் ஐந்தாம் தொகுதியின் இறுதிப் பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது.

நா. கனகராஜையர்
27-6-62

End

தொடர்ச்சி (R. No. 7786)
6. **அலர்மேல் மங்கை மணவாளன்**
அருள் வேண்டு மாலை

1. நெடியாய் குறிய மாணியென நின்றாய்
உலக மூன் றளந்தாய்
நிமிர்ந்து விண்ண மளக்கின்ற
நிலையி லுயர்ந்த திருமலையாய்

ஒடியா வுளத்து மெய்யன்பர்
ஒருகா லல்ல பல்காலும்
உவப்பா னடந்து மலையேறி
உனது கோயி லகம்புகுந்தே

படியார் வாழ்வு வகையனைத்தும்
பாலித் தருள்வா யெனவேண்டப்
பாரும் விண்ணும் பாராட்டும்
பரம சுகத்தை டவர்க்கருள்வாய்

அடியார் மனமாக் கோயிலகம்
அவாவுற் றமரும் அரசேயோ

அலர்மேல் மங்கை மணவாளா
அடியேம் குறைகேட் டருள்வாயே.

2. பொன்பால் மனம்வைத் தயாவாரும்
புகழே விழைந்து மறுகுநரும்
புலமைத் திறத்தா னிதருளிற்
புகுந்து திளைக்க நினைபவரும்

மன்பால் விழைந்து புகுந்தவனை
வாழ்த்திப் புகழ்ந்த முறைபோன்றே
மனத்தை வாக்கைக் கடந்தநினை
வழிபட் டடைய வருபவரும்

வன்பால் இறுகிப் பாறையென
வளர்ந்த மனத்தை நினைக்கமையும்
மலரே போன்ற தளியென்று
வழங்கி வருகென் றழைப்பவரும்

அன்பால் அடைந்தார் எனக்கருதி
அருளின் பெருக்கைப் பொழிதலைவ
அலர்மேல் மங்கை மணவாளா
அடியேம் குறைகேட் டருள்வாயே.

99. தூண்டா விளக்கே சுயஞ்சோதி
சொல்லுக் கடங்காப் பரம்பொருளே
தோன்றுந் துணையாக் கலியுகத்தே
சுருதி விளக்கு தனிமுதலே

மாண்டார் பிறந்தார் மறுவலுமே
மாளப் போவர் எனும்வழக்கை
மாற்றி யருளுந் திருவடியாய்
மறையோர் புகழ்ந்த திருமலைமேல்

ஆண்டான் அடிமைத் திறமுலகர்
அறிய விளக்கு மருளானோ
அரிய தொழும்பர் பராவு முறை
அவனிக் குணர்த்து முளத்தானோ

ஆண்டாள் பாவை கேட்டுருகும்
அரசே காட்சி கொடுக்கின்றாய்
அலர்மேல் மங்கை மணவாளா
அடியேம் குறைகேட் டருள்வாயே

100. குன்றந் தோறும் குடிகொண்ட
குமரற் கருமை மாதுலனே
கொடிமே லுவணன் றனையேற்றும்
கொற்ற முடைய பெருமானே

மன்றம் புகுந்து வழக்காடும்
வாதம் பயின்றார் மனமடங்கி
வாக்கு மடங்கி நோக்கிநிற்க
மலைமேல் விளங்கும் பரம்பொருளே

இன்றங் கடைவே மெனவெண்ணேல்
என்று முனக்கே தொழும்பானேம்
எமைநீ யேலா திருப்பாயேல்
இறைமை குறைவு படுங்கண்டாய்

அன்றங் கடைந்த ஆழ்வார்கள்
அடிகள் பற்றி அடைகின்றேம்
அலர்மேல் மங்கை மணவாளா
அடியேம் குறைகேட் டருள்வாயே.

வாழ்த்து

பெரிய பெருமாள் வேங்கடத்துப்
பெருமாள் கழல்கள் வாழியரோ
பிணிக்கும் தொழும்பர் தலையேறிப்
பிறங்கு முடியாய் வாழியரோ

உரியபதி யென் றவனுளந்த
உயர்மா மலையும் வாழியரோ
உறுதொண் டியற்றியாங் கிருக்கும்
உயிர்க ளெல்லாம் வாழியரோ

கரிய பெருமாள் திருமார்பிற்
 கவினும் பிராட்டி வாழியரோ
கணக்கில் நலங்கள் அருளுவதே
 கருத்தாம் புவியும் வாழியரோ

அரிய தவம்பூண் டவன்பணியை
 அடையும் இறைவி வாழியரோ
அலர்மேல் மங்கை அடியவர்கட்
 கருளி நீடு வாழியரோ!

10-7-62
நா. கனகராஜன்

Colophon

1. திருப்பள்ளி யெழுச்சி
2. வேத விழுப்பொருள் சந்திர கலாமாலை
3. திருவேங்கட நாயகன் விண்ணப்பக் கலிவெண்பா
4. வேங்கடநாதன் வேண்டுகோள் மாலை
 புவனேசுவரி அந்தாதி இறுதியில் நோக்குக 27-6-62
5. திருவேங்கடவன் வருகைச் சிந்து
 (சங்கர விஜயம் II இறுதி 27-6-62)
9. அலர்மேல் மங்கை மணவாளன்
 அருள் வேண்டு மாலை

(ஆஞ்சநேய புராணம் 5ம் பாகம் இறுதியில் பூர்த்தி 10-7-62)

குறிப்பு

இந்த ஆறு பிரபந்தங்களும் ஒரு தொடர்புள் உள. இவை திருவேங்கடமுடையான் திருவருள் பெற விழைந்து இயற்றப்பட்டன. இன்னும் நோய் பூரண குணம் பெறவில்லை. திருப்பதிக்கு வரும். குறிப்பும் கிடைக்கவில்லை.

நா. கனகராஜன்
10-7-62
மதுரை

(கு-பு)

இந்நூல் திருவேங்கட முடையான் துதி மஞ்சரி என்னும் பெயர்த்து. இஃது நூலாசிரியர் தாம் ஒருகால் நோயுற்றிருந்த காலத்து, அது தீரும் பொருட்டு, திருவேங்கட முடையான் மீது பாடிய பிரபந்தங்களின் தொகுப்பாகும். முற்றுப்பெற்றது. இதன் கண் ஆறு சிறு பிரபந்தங்கள் அடங்கியுள்ளன.

அவையாவன:-

1. திருப்பள்ளி யெழுச்சி
2. திருவேங்கட வேத விழுப்பொருள் சந்திர கலா மாலை
3. திருவேங்கட நாயகன் விண்ணப்பக் கலிவெண்பா
4. வேங்கட நாதன் வேண்டுகோள் மாலை
5. திருவேங்கடவன் வருகைச் சிந்து
6. அலர்மேல் மங்கை மணவாளன் அருள் வேண்டுமாலை

இவை யாவும் திருவேங்கடநாதன் பெருமைகளையும், ஆற்றல் களையும் எடுத்துக் கூறுகின்றன. செய்யுள் நடை சிறப்புடையது. இதனுள் 5ம் பிரபந்தம் R.No.7801-ம் எண்ணின் இறுதியிலும், 6ம் பிரபந்தம் R.No.7786-ம் எண்ணின் இறுதியிலும் அடங்கியுள்ளன.

இதன் ஆசிரியர் நா. கனகராஜையர். ஊர்:- புதுக்கோட்டை; காலம்:- தற்காலம் இவர் இது போன்ற பல அரிய நூல்களை இயற்றியுள்ளார்.

R. No. 7804

திருவேரகத் திருவாயிரம்
TIRUVĒRAKA-T-TIRUVĀYIRAM

Paper: 33·8 × 21·2 cm. Pages 1-135

Lines 36 on a page. Tamil. Good. New. Extent 2,400 granthas.

Complete

Poet N. Kanagarajaier sings the glory of Murugan templed at Tiruveragam which is otherwise known as Swamimalai in 1000 verses.

Beginning

ஸ்ரீ

முருகன் திருவருள் ணை

திருவேரகத் திருவாயிரம்

காப்பு

1. நார கத்தின் மெய்யன்பர் நாட்டம் நிறைவேற்றும்
ஏர கத்தின் வேலன் இணையடிக்கே - சேரவைக்கும்
செய்ய தமிழின் திருவா யிரமைந்து
கையன் அருள்பெறுங் காண்.

அவையடக்கம்

7. பாட்டின் பொருளும் பயிலும் சுவைநலமும்
கேட்டின் புறுபுலவர் கேட்டுருகும் - பாட்டிலையே
ஆயினும் ஏரகத்தின் அப்பனருள் ஆயிரப்பா
வாயினொடு நெஞ்சுள் வரும்.

நூல்

1. நீரக மேவிய மைம்மாள் மருக நினைத்துருகும்
சீரக மாலய மென்றே யுணரும் திருவுளத்தாய்
பாரகம் வாழ்வுறு மாந்தரைக் காக்கும் பரிவெழவே
ஏரகம் மேயினை மாதர் இருவர் இயைபுறவே.

2. இயைபொடு மோனை யெதுகை பொருந்து மினியசெய்யுள்
தயைகெழு மேரக வேளுக்குச் சாத்தும் தமிழ்ப்புலவர்
சயமுறு வாழ்வின ராகுவர் ஞாலத்திற் றத்துவத்தின்
வியனுறு மெய்ப்பொருள் தேறுவர் பேரின் மேவுவரே

3. மேவாரை வெல்லும் விறல்வேல் மயிற்பரி மேலழகன்
சாவாத வாழ்வினை யன்பர்க் கருள்செயுந் தண்ணளியான்
தேவாதி தேவன் திருநுதல் தோன்றிய தீப்பொறியின்
மூவாத மூர்த்தியன் ஏரகம் வாழ்வார் முதல்வனன்றே

767. நிறுத்தநன் மொழியும் குறித்தசெம்
மொழியும் நேர்மையோ டியைவதே தகுதி
நிறுத்தமெய்ப் பொருளின் தத்துவ மொழிநீ
நின்னையே யணுகுறு நெறியே

குறித்தநன் கருத்தை விளக்கிய மொழியான்
கோயிலே கெங்கொளு முருக
அறுத்தன னுலகத் தொடர்பினை யடைந்தென்
ஆண்டருள் கருணைவா ரிதியே.

End

998. வம்மினோ செல்வமே மதித்த மக்களே
வம்மினோ கல்வியை வளர்த்த செல்வரே
வம்மினோ கலைகளை வழங்கு மன்பரே
வம்மினோ வேரகம் வணங்கி வாழவே.

999. வாழ்த்துவம் முருகனை மலையின் வேந்தனை
தாழ்த்துவம் முடித்தலை சம்பு செல்வதற்கே
ஊழ்த்துயர் அறுத்தருள் ஒருவன் பேர்சொலி
யாழ்த் தொனி யெழுப்புவாம் ஏரகத்திலே

1000. இல்லென வுருவரை யேற்ற வெம்பிரான்
சொல்லென மறைமுடி துணிந்து சொற்றவன்
எல்லென விளங்குறும் எழில்கொள் மேனியான்
கல்லென வேரகம் கலக்கும் நீரனே.

வாழ்த்து

வாழி யேரக வள்ளல் மலர்க்கழல்
வாழி வேலன் மணந்த விருவரே
வாழி யன்னவன் மாண்பறி பண்பினர்
வாழி ஞாலமும் மற்றவன் காக்கவே.

(கு-பு)

இந்நூல் திருவேரகத்திருவாயிரம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. தாள்கள் கட்டப்படாமல் தனித்தனியாக உள்ளன. இந்நூல் முருகன்படை வீடு ஆறனுள் ஒன்றாகிய திருவேரகத்தி லமர்ந்த முருகனைப் பற்றியது திருவேரகம் - சாமிமலை. அங்கு எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மேல் ஆயிரம் செய்யுட்கள் பாடப்பட்டுள. இவை முருகனுடைய அருஞ்செயல்களையும், அருமை பெருமைகளையும் பற்றி விளக்கமாகக் கூறுகிறது. அம்முருகனுடைய அருளை வேண்டிய பாடப்பட்டுளது போல் காணப்படுகின்றது. செய்யுள்நடை சிறந்தது.

இதன் ஆசிரியர் நா. கனகராஜையர் என்பவராவர். ஊர்:- புதுக்கோட்டை; காலம்:- தற்காலம். இவர் இது போலும், அநேக தோத்திரப் பிரபந்தங்களைத் திருமால் மேல் பாடியுள்ளார். காண்க.

R. No. 7805

குன்றுதோறாடல் திருவாயிரம்
KUNṚŪTŌṚĀḌAL TIRUVĀYIRAM

Paper : 33·8 × 21·2 c.m. Pages : 1-158

Lines 36 on a page. Tamil. Good. New. Extent 2,800 granthas.

Complete

This is on the same line described above, but the places of Murugan are different here. Here too we have 1000 verses.

Beginning

முருகன் திருவருள் துணை
குன்று தோறாடல் திருவாயிரம்

காப்பு

குன்றுதோ றாடும் குமரப் பிரான் கழற்கே
சென்றுசே ராயிரம்பாச் செப்புதற்கே-ஒன்று நெஞ்சே
வள்ளிமணம் காண வருங்களிற்றைப் போற்றியருள்
உள்ளியமைந் தின்பமுற வோது.

அவையடக்கம்

பேறா யிரம்வேண்டிப் பேணவரு வார்க்கருளும்
நூறா யிரம்பெயர்கொள் நோன்மைமலி யாறுமுகன்
ஆறா யிரம்பாட்டுள் ஐந்தாவ தாயிரத்தைத்
தேறா யிரம்புலவர் செஞ்செவிக்குச் சேர்த்துவமே

நூல்

1. நன்றுதோ றாடும் நம்பன் ஞானவேல் பிடித்த கையான்
என்றுதோ றோளிரு மேந்தல் இணையிலா வேற்ற முள்ளான்
கென்றுதே ருளத்தினோர்க்குத் திருவருள் சுரக்கும் செம்மல்
குன்றுதோ றாடுமென்று கூறுமால் குமரன் மாட்டே.

2. பாட்டினால் முருகன் கோலம் பற்றலாம் கட்ட லாமே
கோட்டினா லுயர்ந்த குன்றம் கோயிலாக் கொள்ளும் கோமான்
ஈட்டினா லெவரு மெட்டா எந்தலெம் பெருமான் தொன்மை
ஏட்டினா லறியப் பட்டான் இமயத்தே யிருக்கின் றானே.

484 என்னைநீ யுணர்ந்துளாய் யானுநின் மலர்ப்பதம்
தன்னை யென்று முடிமிசைத் தாங்கு பேறுவாய்த் துளேன்
பொன்னை வேண்டி யெய்தலேன் புகழை வேண்டி நின்றிலேன்
நின்னை வேண்டி மேவினேன் நீ மாலை யையனே.

End

999. நிலைபெ றாத நிருபர் நிலைமையும்
நிருபர்ச் சார்ந்து நிமிரும் பெருமையும்
கலைக லாத கயவர் இணக்கமும்
கற்றசெல்வர் கணத்தைப் பெறாமையும்

உலையி லேறு மொளிர்பொன் மயக்கமும்
உள்ள நின்னை உணராப் புலைமையும்
தலையிலேறும் சதுமுகன் கோட்டமே
சண்முகா சயிலா வருள் தக்கதே.

1000. தக்க செய்கை தனைநினை யாமையும்
தகாத செய்கை தனையே புரிதலும்
மிக்க சான்றவர் மென்மொழி நீக்கலும்
மேதை யில்லவர் வீணுரை கேட்டலும்

புக்க வாழ்விற் புகுந்த குறைகளாம்
பொதியில் வாழ்ந்த புராரி குமாரனே
சொக்க சுந்தர சுந்தரி காந்தனே
தூய்மை யெய்தித் துயர்கெடல் நன்றரோ

வாழ்த்து

3. வேதம் வாழ்க வியன்றமிழ் வாழ்கவே
விண்ணம் வாழ்க வெளியகம் வாழ்கவே
பூதம் வாழ்க பொறுமையும் வாழ்கவே
புகழும் வாழ்க புரமெலாம் வாழ்கவே

மாதம் வாழ்க வருடமும் வாழ்கவே
மதியம் வாழ்க வளர்கதிர் வாழ்கவே
மோதம் வாழ்க முறைமையும் வாழ்கவே
முருகு வாழ்க முருகருள் வாழ்கவே

Colophon

நா. கனகராஜன், மதுரை

(கு-பு)

இந்நூல் குன்றுதோறாடல் திருவாயிரம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இது முருகன் விரும்பித் தங்கும் மலைத்தலங்களின் மேல் அவன் எழுந்தருளியுள்ள சிறப்பினைப் பற்றி புகழ்ந்து பாடுவது. முன்னூலைப் போன்றதேயாகும். ஆசிரியர்:- நா. கனகராஜையர், ஊர்:- புதுக்கோட்டை காலம்:- தற்காலம். காண்க.

R. Nos. 7806-7807 (One Volume)

Paper : 33·7 × 21 c.m. Pages : 1-162

Lines 24-44 on a page. Tamil. Good. New. Extent 2800 granthas.

R. No. 7806

திருவாலவாய்த் திருவாயிரம்
TIRUVĀLAVĀI-T-TIRUVĀYIRAM

Pages : 1 - 148 Extent 2,500 granthas

Complete

Siva enshrined at Tiruvalavai, popularly known as Madurai, has been lauded here by N. Kanagarajaier on 1000 verses asking for grace.

This work has been composed in 1959.

Beginning

உ
சிவமயம்
திருவாலவாய்த் திருவாயிரம்
சித்தி விநாயகர் காப்பு

ஆலவா யீசனடிக் காயிரவர் தாதியெனும்
நூலவா யோத நுழைமனமே - கோலமார்
சித்தி விநாயகன் சேவடியைச் சிந்திக்க
சித்தி யருளுமவன் சேர்ந்து.

நூல்

1. திருவால வாயுறை சொக்கப் பிரான்மலர்ச் சேவடியைக்
கருவால வாயுறு கன்மப் பிணிப்பிற் கழல வெண்ணும்
தருவால வாயுறு ஞானியர் போக்கிற் றழைக்கு நெஞ்சே
உருவால வாவொழித் துள்ளது தேறுக வுய்தி யுண்டே

2. உய்யக் கொண் டாள் வுறுதுணையா கும்ஒரு பொருளுண்டு
ஐயக் கண் டாழு மருள்வேடம் பூண்டருள் அப்பொருளை
வையக் கண் டாழு மனமுளதேல் மணம் வாழ்கடம்பின்
மொய்யைக் கண் டாடும் திருவாலவாய் நகர் முன்புசெல்லே.

வேறு

501 உவம னில்லவன் உருவக மிலாதவன் ஒருவன்
தவம தாற்றிய ஞானியர் மனத்தொளிர் தனியன்
நவம தாயினன் பழமையு மாயினன் நமது
பவம தோட்டவே மதுரையுள மர்ந்தனன் பரிந்தே

999. பங்குவினைப் பருவதமேற் பரிவா னேற்றிப்
பாதபிரண் டவன்றளை மேற்பதிக்க வல்லான்
கங்குகரை யிலாவன்பிற் காரைக்காற் பேய்
கயிலைவர வன்னையெனக் கனிவாற் சொற்றான்

பங்குனியி லுத்தரநாள் பத்தர் கோட்டி
பணிந்துருக மணக்கோலம் பரிவாற் கொண்டான்
எங்குமுள வெம்பெருமான் இங்கு கூடல்
எழில் வளரும் கோயிலுளான் ஏத்துகேனே.

1000. ஏத்துமுறை யின்னதென எய்யே னெந்தாய்
எளியேனை யொளியுடையார் இனத்தே சேர்ப்பாய்
ஆர்த்தியொரு நூறுசொலி அடைந்தே னேனும்
ஐயநினைப் புகழ்ந்தே னென்றகத்தே கொள்வாய்

யாத்துறவு பெருந்தெய்வம் யாப்பி லுள்ளான்
ஏற்றருளும் பெருவள்ளல் எல்லாம் நீயே
தீர்த்த தல மூர்த்திமும்மைச் சிறப்பும் வாய்ந்த
திருவால வாயுறையும் தேவர் தேவ.

வாழ்த்து

வள்ளல் பண்பு வடிவெடுத்த மதுரையீசன்
மலர்க்கழல்கள் என்றுமன்பர் மனத்தே வாழ்க
பொள்ளல் மய வுடலகத்தே புகுந்துகோயில்
புரிந்தருளும் கயற்கண்ணி புகழும் வாழ்க
எள்ளல் தவிர திருத்தொண்டர் இனமும் வாழ்க
இனியதமிழ் யாக்கவல இயலோர் வாழ்க
கொள்ளப் பிகுகுலம்வாழ்க கொடுப்பான் வாழ்க
கோமாட்டி கன்னிநகர் குலவி வாழ்க.

Colophon :

நா. கனகராஜன்
9-8-59
பூர்த்தியானது
ஞாயிறு காலை 5-30 மணி விகாரி ஆடி 24 பஞ்சமி அத்தம்

(கு-பு)

இந்நூல் திருவாலவாய்த் திருவாயிரம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இஃது திருவாலவாய் என்னும் மதுரைமா நகரில் கோயில் கொண்டெழுந் தருளியுள்ள சிவபெருமானைப் பற்றிப் புகழ்ந்து பாடப் பெற்றதாகும். இதன்கண் அவரது அருளிச் செயல் களும் பிறவும் நன்கு விளக்கப்படுகின்றன. விளக்கித் தம்மைக் காக்கும்படி வேண்டுகிறார் கவி.

நூறு பாட்டுக்கொரு முறை சந்தம் மாற்றிப்பாடப்பட்டுளது. நன்றாகவுளது. ஆசிரியர்:- நா. கனகராஜையர். ஊர்:- புதுக்கோட்டை காலம்: தற்காலம். தாள்கள் கட்டப்படாமல் தனித்தனியே உள்ளன.

R. No. 7807

அங்கயற்கண்ணி அருள்வெள்ளமாலை

AṆKAYARKAṆṆI AṚUḶVEḶḶAMĀLAI

Pages : 149-162 Extent 300 granthas

Begins on page 149 of the manuscript described under R. No. 7806.

Complete

Composed in 1959 by N. Kanagarajaier, this literary work sings the glory of Angayarkkanni of Madura in 100 verses.

Beginning

காப்பு

தமிழ்மதுரை வாழவந்த தண்டமிழ்ச் செல்வி
அமிழ்துபொழி யம்பகங்கொ ளன்னை-இமிழ்மறைதேர்
அங்கயற்க ணம்மை அருள்வெள்ள மாலைமகன்
பங்கயக்கண் எய்தும் பணிந்து.

நூல்

1. நூலவா நுண்மை யனைத்து மருள்புரி நோன்புடையாய்
ஞாலவாழ் வின்ப நயக்க வமைத்தருள் நல்விழியாய்
பாலவா மின்பத் தமிழ்மாலை யேற்றுப் பரிந்தருள்வாய்
ஆலவாய் கோலோச்சும் அங்கயற்கண்ணி அருள்வெள்ளமே.

2. செறிவு தெளிவு சமநிலை சாரச் சிறந்த கவி
நெறி தெளி பாவலர் பாடினர் சூட்ட நிரம்பும் விழி
வெறிகமழ் நோக்கத்தின் ஆண்டருள்வா யென்பர் மேதகையோர்
அறிபொரு ளாகாத அங்கயற் கண்ணி அருள் வெள்ளமே.

48. விடையார் கொடியினன் தோளுற மாலிகை வேயுமன்னே
நடையார் துறவியர் நெஞ்சகத் கோயில் நடமிடுவாய்
படையார் குமரர் இருவரை யீன்ற பராபரையே
அடையார் உளரேகோ லங்கயற்கண்ணி அருள்வெள்ளமே

End

99. நீற்றைப் புனைந்து சுடலையி லாடிய நின்மலனார்
கூற்றைக் கவர்ந்த கொடியே வரமொன்று கொள்ள வருள்
பேற்றைத் தரவல்ல நின்பதப்போது பிடித்துளயாம்
ஆற்றைப் புகரைத்தி அங்கயற்கண்ணி அருள்வெள்ளமே

100. கங்கையைச் செஞ்சடைக் காட்டு ளடக்கிய கண்ணுதலின்
செங்கையைப் பற்றிய தேவி திரிபுரைசெந் தமிழாய்
சங்கையைப் போக்கிய றிருவருள் பாத சரோருகத்தாய்
அங்கையைக் கோத்தனம் அங்கயற்கண்ணி அருள்வெள்ளமே.

வாழ்த்து

வாழிய சொக்கப் பெருமான் றிருவடி மாமலரே
வாழிய அங்கயற் கண்ணி திருவடி மாமலரே
வாழிய தண்டமிழ் வாழிய ஆரியம் வாழிமறை
வாழிய தெய்வ நினையும் மனத்தினர் மாநிலத்தே.

Colophon

நா. கனகராஜன்

(ஆனி யுத்தரத் திருநாள்) உஅ ஆனி விகாரி 12-7-59
பிற்பகல் 1·20க்குப் பூர்த்தியானது.

(கு-பு)

இந்நூல் அங்கயற்கண்ணி அருள் வெள்ளமாலை என்னும் பெயர்த்து. முற்றுப்பெற்றது. மொத்தம் நூறு செய்யுட்களுள்ளன. இது மதுரையில் கோயில் கொண்டுள்ள அங்கயற்கண்ணி அம்மை

யின் மேல் புகழ்ந்து பாடப்பெற்றதாகும். இது தேவியின் அருட் சிறப்பை நன்கு விளக்குகிறது. தாள்கள் தனித்தனியே உள்ளன.

ஆசிரியர்:- நா. கனகராஜையர்; ஊர்:- புதுக்கோட்டை; காலம்:- தற்காலம்.

R. No. 7808

பழ முதிர் சோலைத் திருவாயிரம்
PAḶA MUTIR SŌLAI-T-TIRUVĀYIRAM

Paper : 34·8 × 20·8 c.m. Pages : 1—195

Lines 20-40 on a page. Tamil. Good. New. Extent 3,400 granthas Complete

Sung in 1960 by N. Kanagarajaier, this piece speaks on lord Muruga at Pazhamudircholai in 1000 verses.

Beginning

ஸ்ரீ
பழ முதிர் சோலைத் திருவாயிரம்

தொடக்கம்	பூர்த்தி
30-7-60	18-9-60 ஞாயிறு
சார்வரி ஆடி கரு	சார்வரி புரட்டாசி ௩

காப்பு

பழமுதிர் சோலைப் பதியமரும் செவ்வேட்
குழகனைப் போற்றும் குறிப்பால் - எழுபவந்தம்
ஆயிரத் தந்தாதி ஆனைமுகத் தையனருள்
பாயிரத்தே கொள்ளும் பணிந்து.

நூல்

1. பழமுதிர் சோலை யென்னும் பதியில்வாழ் குமரவேளைக்
குழகனைத் தமிழைத் தந்த குரவனைக் குணங்கள் எல்லாம்
அழுபற அமைதற் கான் ஆகரந் தன்னை நெஞ்சால்
விழவுறு தனிக்கண் சென்று வேண்டினம் வணங்கு வாமே.

2. வணங்குவாய் தலையே நாவே வாழ்த்துவாய் முருகவேளை
இணங்குவாய் குகன்றன் அன்பர் இனத்தோடே பயின்று நல்ல
குணங்கொளாய் சோலைக் குன்றம் குறுகுவாய் குமர வென்றே
அணங்கோடே யமர்வான்முன் சென்றகமுறப் பணிபூண் பாயே.

521. இலமெனு மொழியை நாணம்விட் டிசைத்தே
இருகையும் அகற்றினர் விரித்துக்
குலமொடு குணமும் சிறிதுமே யமையாக
கொடிய பா முலுத்தரைப் புகழ்ந்து
நலமெனு மரும்பே றழிந்திட வுலகில்
நயந்து வாழ் மனித்தருக் களே
வலமிடம் மகளிர் தழுவுறச் சோலை
மலையின்மேல் வாழுமால் முருகே.

End

999. பழமுதிர் சோலையின் முருகைப் பாராதார் பாராதார்
பழமுதிர் சோலையின் முருகைப் பணியாதார் பணிவறியார்
பழமுதிர் சோலையின் முருகைப் பாடாதார் பாட்டறியார்
பழமுதிர் சோலையின் முருகைப் பற்றாதார் பாவியரே.

1000. பாவியினை யுணராது பழமையுளே மூழ்குமவர்
காவிவிழி யிருவரொடு கலியாண கோலத்தே
ஆவியுட லெனவமைந்த ஆறுமுகக் காட்சிதரும்
பாவியலை யுணர்ந்துருகும் பழமுதிர் சோலையு நிமிர்ந்தே.

வாழ்த்து

வாழியரோ ஆறுமுக வள்ளல் திருவடி மலரே
வாழியரோ தெய்வானை வள்ளி திருத்தளி ரடியே
வாழியரோ பாணடியர்தம் வளநாடு மறைகாத்து
வாழியரோ பழமுதிர்கா மலையுருவ மமைவுற்றே.

Colophon

பூர்த்தி 18-9-60 ஞாயிறு மாலை 4 மணி
சார்வரி புரட்டாதி ங ஞாயிறு நா. கனகராஜன்

(கு-பு)

இந்நூல் பழமுதிர் சோலைத் திருவாயிரம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இஃது முருகன் தங்கும் ஆறுபடைவீடுகளில் ஒன்றாகும். இது முருகனின் சிறப்புக்களையும், அருட்டிறமைகளையும் பற்றி விளக்கிக் கூறுகிறது. பழமுதிர் சோலை என்பது மதுரை யருகிலுள்ள கள்ளழகர் கோயிலைக் குறிக்கும் என்பர்.

இந்நூல் நூறுபாடல்கட்கு ஒரு முறை சந்தம் மாற்றிப் பாடப் பட்டுள்ளது. நன்றாக வுளது. ஆசிரியர்:- நா. கனகராஜையர்; ஊர்:- புதுக்கோட்டை; காலம்:- தற்காலம். இவரியற்றிய வேறு நூல் கள்:- இராமாயணத் திரிவேணி, ஆஞ்சநேய புராணம், வால்மீகியும் கம்பரும் (உரையாட்டம்) முதலியனவாகும்.

R. No. 7809

திருப்பரங் குன்றத் திருவாயிரம்
TIRUPPARAṆ KUNṞA-T- TIRUVĀYIRAM

Paper : 32·4 × 21·2 c.m. Pages : 1—102

Lines 20-48 on a page. Tamil. Good. New. Extent 2400 granthas.

Complete

Running in andadi style, all these 1000 verses eulogise lord Muruga worshipped at Tirupparangundram (near Madura). Poet N. Kanagarajaier composed it 1959.

Beginning

உ

முருகன் துணை

திருப்பரங்குன்றத் திருவாயிரம்

திருப்பரங் குன்றத்துச் செவ்வேள் கழற்கே
கருப்பரங் குன்றக் கருதி - விருப்புரங் கொண்டு
யாக்கும் திருவா யிரப்பனுவல் ஏரம்பன்
காக்கும் துணைமைபெறுங் காண்.

நூல்

1. திருவளரும் பரங்குன்றச் செவ்வேட் செம்மல்
தேவர்பிரான் மகள்தழுவும் திரள்தோள் வீரன்
உருவளரும் முகமாறும் உலகம் காக்கும்
உவப்பானே விளங்குகின்ற உருவச் செல்வன்

தருவளரும் திருநாட்டின் தலைமை வாழ்வு
சதமகனுக் கிருக்கும்வணம் சமர்க்குச் சென்றான்.
கருவளரும் உயிரினத்தைக் காத்தற் கென்றே
கலியுகத்தின் வரதனெனக் கவின்கொண்டானே.

2. கொண்டருள்வன் குன்றுறையுள் குன்ற வில்லைக்
குனித்தருளும் கயிலைமலைக் கோமான் மைந்தன்
கண்டருள்வன் மூவாறு கண்கள் சாத்திக்
கழல்பணிந்த திருத்தொண்டர் கணத்தை யெல்லாம்

பண்டருள்வன் என்றுகதை பகர்தல் வேண்டா
பாடுநருக் கின்றுமவன் பதங்கள் நல்கும்
விண்டருள்வன் வேதமுறை வியப்பை யெல்லாம்
விண்டுவொடு பரங்கிரியில் விளங்குவானே.

572. குறிப்பறிந்து பணிபூண்டு காதலினை வெளியிட்ட குணஞ்சால் பெண்டிர்
வெறுப்படைந்து பாவியிவ னென்றெழியு மெனநினைக்கும் விழும மூப்பு
நெறிப்படுமுன் பொறிபுலன்கள் நழுவாமுன் பரங்கிரியில் நிரம்பா நின்ற
பொறிக்குகைப் படாதவனைச் சுரபதியின் மருமகனைப் போற்றல் நன்றே.

End

999. மதிச்சடைய பெருமானோடு மாலுநின் மகிழ்ச்சியால்
விதிச்ச துர்முக னஞ்சவே வேதநுண் பொருள் பேசிய
மதிச்செயற் சிறுபிள்ளையை வானவர்க் கமர் நற்றுணை
கதித்திபற்றியே சேயினைக் கவினி பரங்கிரி காண்பரே.

1000. காணவந்தனர் காளையைத் கண்களாயிர முள்ளவன்
பேணவந்த கணத்தினார் பெரிய மாதவமுனிவரே
பூணவந்த யென்பரே பொறிபுலன்களை வென்றவர்
மாணவந்த பரங்கிரி வளர்வுபெற்றது திருவினே.

வாழ்த்து

வாழிய உலகமெல்லாம் வாழிய உயிர்களெல்லாம்
வாழிய வழுதிநாடு வாழிய மாடக் கூடல்
வாழிய கந்தன் குன்றம் வாழியபரமக் குன்றம்
வாழிய முருகன் பாதம் வாழிய மகளிர் சீரே.

Colophon

நா. கனகராஜன்
2-9-59 புதன் மாலை 4 மணி
விகாரி ஆவணி கஎ மகம் அமாதிரி

(கு-பு)

இந்நூல் திருப்பரங்குன்றத்திருவாயிரம் என்னும் பெயர்த்து. இஃது திருப்பரங்குன்றத்தில் கோயில் கொண்டெழுந் தருளியுள்ள முருகனின் சிறப்புக்களைப் பற்றிக் கூறுகிறது. திருப்பரங்குன்றம் முருகன் தங்கும் ஆறுபடை வீடுகளில் ஒன்றாகும்.

இந்நூல் அந்தாதி முறையில் பாடப்பெற்றிருப்பதோடு, நூறு பாடல்கட்கு ஒரு முறை வேற்றுச் சந்தம் அமைத்தும் பாடப்பட்டுள்ளது.

ஆசிரியர்-நா. கனகராஜையர்; ஊர்-புதுக்கோட்டை; காலம்-தற்காலம். காண்க.

R. No. 7810

திருச்செந்தூர்த் திருவாயிரம்
TIRUCCENDUR-T-TIRUVĀYIRAM

Paper : 34·6×22.4 c.m. Pages : 1-157

Lines 34 on a page. Tamil. Good. New. Extent 2400 granthas.

Complete

Lord Muruga worshipped at Tiruchendur (Tirnelvelly Dt.) has been worshipped by N. Kanagarajaier in 1000 verses here.

Beginning

முருகன் துணை
திருச்செந்தூர்த் திருவாயிரம்

காப்பு
விநாயகப் பெருமான்

மூலப் பொருளா முனைத்த முதற் பிள்ளை முக்கண்
காலக் கணக்கறியான் கைப்பிள்ளை-சீலத்தார்
வேணும் திருச்செந்திற் பிள்ளைதிருவாயிரத்தைக்
காணும் துணைநின்று காண்.

நூல்

1. திருமலி செந்தூர் வாழுந் தெய்வமே யயில்கை யேந்தி
உருமலி மயூர மூர்ந்தே உளத்திலே நின்னைக் கண்டும்
கருமலி பிணிப்பி னாவே கடுஞ்சமர் எதிர்ந்தான் றன்னை
மருமலி மாலை சூடும் மயில் கோழி யாக்கினாயே.

2. ஆக்குதல் அயற்கே தந்த அண்ணலார் ஆணை மாற்றி
நாக்குழறி யதால் அந்த நான்முகன் சிறைக்கே செல்ல
வாக்குறு பிரண வத்தின் வளமெலாம் தந்தைக் கோதித்
தேக்குறு செந்தில் வேலன் திருவடி சென்னிப் பூவே.

534. நோக்கும் விழிகள் பலவுளாய் நுட்ப மணக்கு முளத்தினாய்
காக்கும் கருணை வடிவமே கந்த குமாரக கடவுளே
வாக்கும் மனமும் வகுத்தனை வந்தனை செந்தி லிருந்தவர்
யாக்குந் திறமும் இசைத்தனை ஏனைனக் கேட்கவும்
வேண்டுமோ?

End

999. மகிழ்நனது மனமறிந்து வணக்கமொடு பயிலும்
மகளிரிரு வரைமணந்த மால்மருக குமர
இகழ்நர் மொழி யறியாதே யிறுமாந்து திரியும்
இதயநிலை யடியவருக் கீந்தருளும் தலைவ

புகழ்நர் கவி மாலிகையைப் புனைந்தருளக் குனியும்
பொற்புடைய திருமுகத்தாய் புத்தேளிர் தலைவ
அகழ்நர்தமைத் தாங்குநிலத் தணிசிலம்பா மலைவாய்
அழகுறவே நின்றருள்வாய் அருந்தமிழ் வாழ்வுறவே.

1000. அரியதமிழ்ப் பனுவலிடை அகமகிழ்ந்து விளங்கும்
ஆறுமுகப் பெருமானே அலைவாயி னரசே
பெரியமறைச் சிரத்தினிடை பிறங்குகின்ற கழலாய்
பேசரிய திருவுருவம் பெருமானே குகனே

கரியதிரு மால்மகளிர் கணவனென வுலகழ்
கருதுறவே யிருந்தாலும் கருத்தினெல்லை கடந்த
தெரிவரிய தாயபொருள் தெரிவிக்கும் குருவாய்
திருச்செந்தில் தனிநின்ற தெய்வதமே திருவே.

வாழ்த்து

6. இருவகை மன்றல் கொண்டே இருவரை மணந்த ஏந்தல்
இருவ்கை யுருவம் பூண்டே எழில்வளர் செந்தில் வ்ாழ்வான்
தருவ்கை ஐந்துகொண்டாள் தளையையும் வள்ளி மாதும்
ஒருவகை யுவந்து வாழ உஞற்றிய முருகே வாழ்க.

(கு-பு)

இந்நூல் திருச்செந்தூர்த் திருவாயிரம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இதுவும் முன்னூலினைப் போன்று, முருகன் பெருமைகளைப் பற்றிக் கூறுகிறது. திருச்செந்தூரின் கண் எழுந் தருளியுள்ள திருமுருகனின் அருமைபெருமைகளை இந்நூலிலிருந்து அறியலாம்.

இந்நூலாசிரியர் நா. கனகராஜையர் என்பவர் ஆவார். ஊர்- புதுக்கோட்டை. காலம்-தற்காலம். காண்க.

R. No. 7811

திருவாவினன் குடித்திருவாயிரம்
TIRUVĀVINAN KUḌI-T-TIRUVĀYIRAM

Paper: 34×21·2 cm. Pages 1-148

Lines 34 on a page. Tamil. Good. New. Extent 2,400 granthas.

Complete

Another feather to N. Kanagerajaiaier's crown. Lord Muruga enshrined at Tiruva vinangudi, generaly known as Palani, has been lifted to a pedastal of glory in 1000 verses.

Beginning

உ
முருகன் திருவருள்
திருவாவினன் குடித் திருவாயிரம்

காப்பு

விநாயகப் பெருமான்

வேதப் பொருளை விளக்கியரு ளேரம்பன்
பாதத் துணையைப் பரவுவாம்-சீதத்
திருவாவி னன்குடிவாழ் செவ்வேள் துதியாம்
உருவா யிரம்பாட் டுறற்கு.

1. செவ்வேள் முருகன் சிலைதோறும் ஆடும் திருக்கழலன்
செவ்வே மறைமுடி யாய்ந்தவர் சிந்தை திகழழகன்
வெவ்வே றெழுந்த மதங்கள் தொழும்பொருள் வேறிலையென்
றிவ்வே மலையினம் போற்றப் பழனி யிலங்குவனே.

